புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது	௨	விரோதிஸு (1889) ஆவணிமீ உ௰௨ ஆரம்பமானது

பத்திராக்கிரயம்.
வருஷம் ஒன்றற்கு:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5-00
இலங்கை தமிழ் 9-00
இலங்கை இந்தியா ரூ 8-00
இங்கிலீசும் தமிழும் 12-00
சோனோயாப்பகுதி ரூ 9-00
இங்கிலீசும் தமிழும் 13-00
முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.
முதன் முறைக்கு:
" ஒருசலம் ரூபா 10-00
" அரைச்சலம் " 5-50
" கால்சலம் " 4-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.
☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"சீர்பூத்த கருவிஅ ணைாச்சி தேக்கச் சிவம்பூத்த நிகமாக மக்கனோங்கப், பார்பூத்த புறச்சமய இருள்கனிங்கப் பரம்பூத்த சைவநெறியோர் தாங்கப்,
பேர்பூத்த சிவனர்க்க இனித தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானூ தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலெண் ரேறு மதம்பூத்த விநாயகன்றுன் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சரு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஸு மாசிமீ ௧௧உ; ( 1934 பிப்ரவரி 22 ) வியாழக்கிழமை. { இலக்கம்—அசு



## கந்தரலங்காரம்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாடிரு நாமம் புகல்பவரே.

இ-ள்: வெற்றிவேற் பெருமான் - வெற்றிவேலாயுதத்தைத் தரித்த பெருமானும்; அடியார்க்கு நல்ல பெருமான் - தமது தொண்டர்களுக்கு இதஞ்செய்யும் நல்லபெருமானும்; அவுணர்குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமான - அசுரர்குலம் முழுவதையும் துகளாக நாசஞ்செய்தருளிய பெருமானும் ஆகிய முருகக்கடவுளுக்குரிய; திருநாமம் புகல்பவர் - திருநாமங்களை (ச்சிரத்தையோடு) ஓதுபவர்; முடியாப் பிறவிக் கடலிற் புகார் - கரைகாணமுடியாத பிறவியாகிய கடலுள் மூழ்கமாட்டார்; படியில்- இவ்வுலகத்திலே (இப்பூமியிலே); முழுதும் கெடுக்கும் மிடியால் விதனப்படார் - இம்மை மறுமை யின்பங்களை முழுவதையும் கெடுக்கவல்ல வறுமைகாரணமாகத் துயரப்படமாட்டார் எ-று.

முடியா, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இலக்கிற் கரைகாணமுடியாததாகலின் "முடியாப் பிறவிக்கடல்" எனப்பட்டது; கரைகாணுதற்கு இறைவன் திருநாமம், திருவடிகள் முதலிய சாதனங்களாகிய தெப்பம் வேண்டுமென்பதே மேலோர் கொள்கை; இதனை:

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்—இறைவனடி சேராதார்"

என வருவனவற்றாலுணர்க. வறுமை கொடிதென்பதையும் அது இகபரபோகங்களைக் கெடுத்தற் கிரர தயவாக்கரும் இயல்புடையதென்பதும், "கொடிது கொடிது வறுமை கொடிது" எனவும், "நெருப்பி னுட்டுஞ் சலுமாகும் நிரப்பினுள் - யாதொன்றுங் கண்பாடரிது" எனவும்; "வறியார் இருமை யறியார்" எனவும்; "வடிவுந் தனமும் மனமுங் குணமும் குடியுங் குலமுங் குடிபோகியவா அடியந் தமிலா அயில்வேல் அரசே - மிடியென் றொருபா விவெளிப்படினே" எனவும் வரும் ஆன்றோர் வாக்கா னறியத்தகும். பெருமான் பெருமான் என்பதின் ஈற்று னகரம் ளகரமாகத் திரிந்ததென்பர். பெருமான் என்னுஞ் சொல் திருமாலுக்கும் குமரவேளுக்கும் பெரும்பாலும் வழக்கப்படுகின்றது. சரவணப்பெருமான் "அடியார் இடைஞ்சல் களைவோன்" ஆதலின் அடியார்க்கு நல்ல பெருமான் என்றார். விதனம், வியசனம் என்னும் வடசொல்லின் திரிபு. முருகன்திருநாமம் புகல்வார்க்கு யாதும் இடையூறு நேரின் அவற்றை நீக்கியருள ஆறுமுகத்தெய்வம் முன்வந்து நிற்பாரென்பதை:

"அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல் தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்."

எனவரும் நக்கீரர் திருவாக்காற் றெளிந்து கொள்க. இது குமரன்திருநாம மகிமையை யுணர்த்தியவாறும்.

முருகக்கடவுளின் திருநாமத்தை உச்சரிப்பவர் பிறவிப் பெரும் பிணி, வறுமை முதலியன ஒழியப் பெறுவரென்றபடி. (சுசு.)

---

## 60000 ரூபா போகுது பரதேசம்!

மோட்டர்க்கார்களுக்கு உபயோகிக்கும் "பெற்ரோல்" எண்ணெய் மாதத்தோறும் இந்த யாழ்ப்பாணத்தில் 35000 கலன் செலவாகிறதாம்; அதன்விலை ஏறக்குறைய 60000 ரூபா. இதில் 100-க்கு 20 விகிதமான பணமே உள்நாட்டில் உபயோகப்படுகின்றது. எஞ்சிய 80 விகிதமும் அந்நியநாட்டவருக்கு அனுப்பப்படுகின்றது.

## அராலி வடக்கு மகா ஐக்கியசபை.

மேற்படி சபையின் நிருவாகசபைக் கூட்டம் ஒன்று சென்ற 17-2-34-ற் கூடி, பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது:

1 அரசாங்க சபையில் ஊர்காவற்றுறைப்பகுதிப் பிரதிநிதியாய் ஸ்ரீ ஊ. துரைசுவாமி அவர்களை வரும்படி கேட்டல்

2. அராலியில் ஓர் பிரசித்த சந்தை வைக்கவேண்டுமென அரசினரைக்கேட்டல்.

3. பத்திரகாளிகோயிற் குளத்திற்கும் வழுக்கி ஆற்றிற்கும் இடையில், அராலி வடக்கிற்கும் கிழக்கிற்கும் போகும் வாய்க்காலை ஆழப்படுத்தி நல்ல நிலைமைக்குக் கொண்டுவருதல். கடித.

## புதிய நகர சங்கங்கள்.

இலங்கையிலுள்ள அநேக சிறு நகரங்கள், தம்மிடம் நகரசங்கங்கள் அமைத்தல்வேண்டுமென ஸ்தல சுயாட்சிச் சங்கங்களின் அதிகார நிர்வாகசபைக்கு எழுதியிருக்கின்றனவாம் ஆனால் மேற்படி சபை, இனிச் சிறிதுகாலத்திற்கு இலங்கையிற் புதிய நகரசங்கங்களை நிறுவுதல் இல்லையெனத் தீர்மானித்திருக்கின்றதாம்

கிராமச் சங்கங்களை விருத்தியாக்கி அவற்றை ஒன்றிலைப்படுத்துவதில் மேற்படி நிர்வாக சபை இனிக் கூடியசிரத்தை யெடுக்குமென்று தெரிகிறது.

## சுலபமான வேலை.

கொழும்பிலுள்ள கே. வீ மார்ட்டின் என்பவன் சட்டவிரோதமாக 2 போதி கஞ்சா வைத்திருந்தானென்றும், அவற்றுள் ஒன்றை நீதிஸ்தலத்திலேயே விற்க முயற்சித்தானென்றும் சென்றசெவ்வாய்க்கிழமை கொழும்புப் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்டான். எதிரி நீதிபதியை நோக்கி, "ஐயா, எனக்கு வேறு வேலையில்லை. இதுபோன்ற சுலபமான வேலையும் பிறிதொன்றில்லை" என்றான்! நீதிபதி அவனுக்கு 1 வருடக் கடுமியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## பதுங்கிப்பாய்ந்த பரிசோதகர்.

—(*)—

லட்சாதிபதிக்கு நேர்ந்தகதி.

ஈற்றில் நிரபராதியே!

மாதகல் கந்தையா அப்புத்துரை என்னும் மேசன் சட்டவிரோதமாக இரண்டு இறாத்தல் அபினும் 4 இறாத்தல் 15 அவுன்ஸ் கஞ்சாவும் வைத்திருந்தார் என்றும், முதலியார் வைத்தியலிங்கம் மார்க்கண்டன் அவர்கள் அவற்றை எடுப்பித்தாரென்றும் சென்றவியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ் சாட்டப்பட்டனர்

பொலிஸ்பரிசோதகர் ஜே எச். ஏ. பர்ணாந்து வழக்கை நடத்தினர் நியாயவாதி மிஸ்ரர் வீ· ஜோசப், நியாயதுரந்தரர் ஸ்ரீ சீ· வீ. இராசரத்தினம் என்பவர்கள் எதிரிக்காக ஏற்பட்டனர்

மேற்படி சட்ட விரோதமான செயலைக் கண்டுபிடித்தவர் எனச் சொல்லப்பட்ட பொலிஸ் உதவிப்பரிசோதகர் மு. எச். ஆர். ஏ. கொறியா பின்வருமாறு சாட்சியம் கூறினர்:

"பண்டத்தரிப்புத் தபாற் கந்தோரில், கஞ்சா அபின்கொண்ட ஓர் பார்சல் வரப்போகின்றது என நான் உளவால், அக்டோபர் மாதம் 20-ந் தேதி அறிந்தேன். உடனே நான் அங்கேசென்று கந்தோ ரதிபரை விசாரித்த அளவில், அவர் பார்சல் வரவில்லையென்றும், வந்தவுடன் அறிவிக்கிறேன் என்றும் சொன்னர். 26-ம் தேதி எனக்கு டெலிபோனில், பார்சல் வந்துவிட்டதென்றும், அதனை எடுப்பதற்கு ஒருவர் வந்திருக்கிறார் என்றும் கந்தோரதிபர் அறிவித்தார்.

உடனே, நான் பொலிஸ் வீரசேகராவுடனும், எனது ரதம் துப்புரவு செய்யும் மார்டின் என்பவனுடனும், எனது காரில் ஏறிப் பண்டத்தரிப்பிற்குச் சென்றேன். பண்டத்தரிப்பு நாற்சந்தியில், மோட்டர்க்காரை நிற்பாட்டி, ஓர் "போஸ்ற்காட்" வாங்கி வரும்படி கந்தோருக்கு வீரசேகராவை அனுப்பினேன்; அத்துடன், நாங்கள் வந்துவிட்டோம் என்றும், பார்சலை ஆளிடம் கொடுக்கலாம் என்றும் தபாற் கந்தோரதிபருக்கு ஓர் கடிதமும் அவரிடம் கொடுத்துவிட்டேன். மேசன் பார்சலை எடுத்துக்கொண்டு போகும்போது எனக்குச் சைகை செய்யும்படி வீரசேகராவுக்குக் கட்டளையிட்டேன்.

"காலை 8-58 மணியளவில் வீரசேகரா சைகை செய்தார். நான் தபாற்கந்தோருக்குச் சமீபமாகவுள்ள நாற்சந்திக்குச் சென்று ஓர் வேலியிற் பதுங்கி நின்றேன். அப்போது 1-ம் எதிரி ஓர் பார்சலுடன் வந்து, வட்டுக்கோட்டைக்குப் போவதற்காக நின்ற ஓர் பஸ்ஸில் ஏறப்போனான். உடனே நான் பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டேன். அவனைத் தபாற்கந்தோருக்கு இட்டுச்சென்று பார்சலை, தபாற்கந்தோரதிபர் சமூகத்தில் திறப்பித்தேன். பார்சலில், 'கு. கந்தசாமி நாடார், இராசம்மா தோட்டம், சாத்தாண்டியா' என்று விலாசமிடப்பட்டிருந்தது. முதலியார் கே. வீ: மார்க்கண்டன், கீரிமலைமடம், கீரிமலை என்னும் விலாசத்திலிருந்து அப்பார்சல் வந்ததாகவும் உறையில் எழுதப்பட்டிருந்தது.

உறையைத் திறந்து பார்த்தபோது, அதற்குள் 2 இறாத்தல் அபினும், 4 இறாத்தல் 15 அவுன்ஸ் கஞ்சாவும் காணப்பட்டன. பின்னர் அந்தப் பார்சலுடன் வட்டுக்கோட்டையில் உள்ள முதலாம் எதிரியின் வீட்டிற்குப் போனேன். அங்கே, அந்தப் பார்சலை எடுக்கும்படி 2-ம் எதிரியே கடிதம் தந்தார் என்று, அன்னவரின் வீட்டை எதிரி காட்டினான். நான் 2-ம் எதிரியின் வீட்டிற்குச் சென்றேன். அவர் வீட்டு விறாந்தையில் நின்றார்.

"நான் யார் என்பதை 2-ம் எதிரிக்கு விளக்கப் படுத்திய பின், ஓர் விசாரணையின் பொருட்டு அவர் கையொப்பம் வேண்டுமென்று கேட்டேன். உடனே அவர் ஒரு துண்டுக் கடதாசியில், தமது கையொப்பத்தைத் தந்தார். தபாற்கந்தோரதிபருக்கு எழுதிய கடிதத்திற் காணப்பட்டுள்ள கையொப்பமும், இதுவும் ஒத்திருந்தன.

"பின்னர் அவர் சமூகத்தில் அவர் வீட்டைச் சோதனை செய்தேன். அங்கு சட்டவிரோதமானதொன்றும் காணப்படவில்லை. 1-ம் எதிரி 2-ம் எதிரியின்கீழ் வேலை செய்யும் ஓர் மேசன். கண்டுபிடிக்கப்பட்ட அபின் கஞ்சாவின் விலை 1000 ரூபாவாகும்."

குறுக்கு விசாரணையில், "முதலியார் மார்க்கண்டனுக்கு இந்த இலங்கை முழுவதிலும் ஆதனங்கள் உண்டு. வட இலங்கையிலும் மட்டக்களப்புப் பகுதியிலும் அவர் கோவில்கள் மடங்கள் முதலிய நிலையங்களைத் தாபித்திருக்கிறார்" என்று உதவிப் பரிசோதகர் கூறினர்.

முதலியார் மார்க்கண்டன், பின்வருமாறு கூறினர்.

"குறித்த பார்சல் ஓர் சுவாமியால் அனுப்பப்பட்ட புத்தகங்கள் என்றே எண்ணினேன். அவர் இங்கு புதியவரானபடியால், அனுப்பியவர் நானென எழுதினர் போலும். எனவே நான் 2-ம் எதிரியைக்கொண்டு அதனை எடுப்பித்தேன்.

"இந்தியாவுக்குப் போக்குவரவு செய்யும் அநேக கப்பல்களை நான் வைத்திருந்தவன்.

"1926-ம் ஆண்டு எனக்கு முதலியார்ப் பட்டம் அரசினரால் சம்மானிக்கப்பட்டது. 1928-ம் ஆண்டு எனது சொத்தின் பெறுமதி 28 லட்சம் ரூபா. இப்போது அதன் பெறுமதி 5 லட்சம் ரூபாவே."

விசாரணையின் பின் நீதிபதி எதிரிகளை நிரபராதிகள் எனக்கண்டு விடுதலை செய்து அங்ஙனம் விடுதலை செய்தமைக்குக் காரணத்தைப் பின் வெளியிடுவதாகவும் கூறினர்.

## ஐரோப்பியரின் பிதற்றுரை.

—*—

தேசாதிபதிக்கு அதிகாரங்கள் இருக்கவேண்டுமாம்!

சென்ற சனிக்கிழமை இரத்தினபுரி ஐரோப்பியத்தோட்டமுதலாளிமாரின் சங்கத்துக் கூட்டமொன்று கூடியது கூட்டத்தலைவரான மிஸ்ரர்: ஜே. டீ. தோர் என்பவர், இலங்கையிலுள்ள ஐரோப்பியரது கடமை என்னவென்று விளக்கினர் அவர் கூறியதன் சாரம் வருமாறு:

"தேசாதிபதிக்கு அளிக்கப் பட்டிருக்கும்விசேஷ அதிகாரங்கள் அவசியமேயென்பது எனது அபிப்பிராயமாகும். அரசாங்க உத்தியோகத்தர் சம்பந்தமான விஷயம் சனப் பிரதிநிதிகள் பொறுப்பில் விடப்படவொண்ணாது. தேசாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கவேண்டும். அரசாங்க உத்தியோகத்தர் அரசாங்கசபைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் என, அநேகர் கூக்குரலிடுவர்; ஆனல், அவர்களின் கூக்குரலால் என்ன கிடைக்கும் என்பது எங்களுக்குத் தெரிந்ததாகும்.

"அடுத்தமுறை நடக்கப்போகும் தேர்தலில், இப்போதுள்ளவர்களிலும் பார்க்கச் சிறந்தவர்களே தெரிந்தனுப்பப்படுவர் என்று நம்புகிறேன். இப்போதுள்ளவர்கள் தேசபரிபாலனத்திற் சிரத்தை யெடுப்பதிலும் பார்க்க ஐரோப்பியரைக் குறைசொல்வதிலேயே அதிக சிரத்தை யெடுக்கின்றனர்."

## விளம்பரம்.

அரசாங்கசபைத் தேர்வு

வலிகாம மேற்கு, தீவுப்பகுதி ஊன்று மிலைகளில் வசிக்கும் வாக்காளர் அநேக ருடைய வேண்டுகோட் கிணங்க, இனி வரும் அரசாங்கசபைத் தேர்தலில் வலிகாவற்றுறைப் பகுதிப் பிரதிநிதியாய் வருதற்கு நான் தீர்மானித்துள்ளேனென இத்தால் வெளியிடுகின்றேன்.

யாழ்ப்பாணம், 22-2-34. } நேவின்ஸ் செல்வத்துரை.

(Mis. 217. 22-2-34)

## தேவை!

எனது பராபரிப்பின் கீழுள்ளதாகிய அனலைதீவு சதாசிவ வித்தியாசாலைக்கு, வரும் பங்குனிமீ தொடக்கம் இரு பயிற்றப்பட்ட உதவி ஆசிரியர்கள் தேவை. ஒருவர் ஆணாகவும், மற்றவர் பெண்ணாகவும் இருத்தல் வேண்டும. விண்ணப்ப பத்திரங்களை இம்மாசம் 25-ம் தேதிக்குள் தலைமை ஆசிரியருக்கு அனுப்பவும்.

(Sgd) V. Chellappah,
Manager
SathaSiva Vidiyasalai,
Analaitivu.

Mis. 216. 22&26-2-34 )



# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஞு மாசிமீ ௧௧௳ வியாழக்கிழமை


## பொலிசரும் ஊரவர்களும்.

ஈழத்தேசங்களில் பெரும்பான்மை பொலிஸ் பகுதியாருக்கும் ஊரவர்கட்கு மிடையே ஒற்றுமையிருத்தல் அரிதெனலாம். இந்தவிஷயத்தில் பொலிசர்மாத்திரம் பிழையென்றும் இல்லையேல் ஊரவர்கள் தாம் பிழையென்றும் நாம் நிச்சயஞ் சொல்ல முடியாது. இருபாலார்க்கிடையிலும் விபரீத விளக்கம் குறைகள் உண்டு. ஆனால், பொலிசருக்கும் ஊரவர்கட்குமிடையே வேற்றுமை தோன்றுவதற்குப் பிரதான காரணம் பொலிசரென்றே சொல்லக்கிடக்கின்றது. இக்காலத்திலே பொலிசர்களுக்கு ஊரவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் போலவே புலப்படுகின்றார்கள். ஊரவர்களும் பொலிசருடன் அச்சத்தோடும் சந்தேகத்தோடும் அவநம்பிக்கையோடுமே ஊடாடுகின்றார்கள். பொலிசரை ஊரவர்கள் தங்களுடைய பாதுகாப்பாளராகவும் ஊரவர்களைப் பொலிசர் தங்கள் கடமை செய்யும் விஷயத்தில் துணைவர்களாகவும் மதித்துப் பரஸ்பரம் விசுவாசம் வைத்து நடந்தால் இப்பொழுது நிகழும் விபரீதங்களும் அனர்த்தங்களும் ஒருபோதும் நேரமாட்டா. இப்படிப் பொலிசருக்கும் ஊரவர்கட்கும் வித்தியாசம் ஏற்படுதற்குக் காரணரா யுள்ளவர்கள் பொலிஸ்பகுதியிலுள்ள சில உத்தியோகஸ்தர்களேயாவர். இச்சிலர் தாம் செய்யும் புத்தியீனமான செய்கைகளின் பயனாகப் பொலிஸ்பகுதியார் எல்லாருக்கும் அவமான பேரையும் குரோதத்தையும் தேடிவிடுகின்றனர். இப்படியானோரைத் தலையெடுக்கவொட்டாது தகைதல் அப்பகுதியிலுள்ள மேலதிகாரிகள் கடனாகும்.

மேலும், பொலிசரை வெறுப்பவர்கள் ஊரவர்கள் மாத்திரமல்லர். பொலிசர் ஊரவர்கட்குமாறாக வழக்குத் தொடருபோது எதிர்பக்கத்து நியாயவாதிகள் பல கேளாத கேள்வி கேட்கின்றார்கள். பொலிஸ் நீதிபதி தொடக்கம் சுப்பிறீங்கோட்டு நீதியரசர் வரையிற் பொலிசரைப் பற்பல சந்தர்ப்பங்களில் கடிந்துவருவதைப் பார்க்கின்றோம். இச்செயல்களும் ஊரவர்கள் பொலிசரிடத்துக் கொண்டுள்ள மதிப்பையும் அச்சத்தையும் கெடுத்துவிடுகின்றன. இங்ஙனம் ஊரவர்கள் நியாயவாதிகள் நீதிபதிகள் எல்லாரும் பொலிசரை வெறுக்கவும் பகைக்கவும் அவமதிக்கவும் கடியவும் காரணமென்ன வென்பதைச் சிறிது ஆராய்தல்வேண்டும். பொலிசர் யாதாயினும் குற்றம் நேர்ந்தால் அவற்றை ஆராய்ந்து உண்மையை யுணர்ந்து அக்குற்றத்திற்கு மூல காரணரா யுள்ளாரைத் தண்டனைக்குள்ளாக்குவதிலும் பொய்யாகக் குற்றம் பாரிக்கப் படுவாரைத் தண்டனைக்குட்படாது நீக்குவதிலும் சமாதானத்தைப் பாதுகாப்பதிலுமே கண்ணுங் கருத்துமா யிருத்தல்வேண்டும். ஒருநாட்டின் எந்தப்பகுதியிற் குற்றங்களும் கலகங்களும் இன்னபிற தீமைகளும் குறைவோ அந்தப்பகுதியிலுள்ள பொலீசரை அரசினரும் ஊரவர்களும் மதிக்கின்றன ரென்ற உண்மையைப் பொலிசர் ஒருபோதும் மறந்துவிடவொண்ணாது. ஆனாற் சில பொலிசர் இந்த இரகசியத்தை விளங்கிக் கொள்ளாமையினாற்போலும், தாம் எவ்வளவு அதிக குற்றங்களைக் கண்டுபிடிக்கின்றார்களோ எத்தனை பலகுற்றவாளிகளை அகப்படுத்துகிறார்களோ அவ்வளவுக்கும் அத்தனைக்கும் தங்களை மேலதிகாரிகள் மதிப்பார்களென விபரீதமாக எண்ணி இடர்ப்படுகின்றனர். மதுபரிபாலனப்பகுதியில் மதுப்பரிசோதகர் விஷயத்தில்மாத்திரம் இப்படியான - அதாவது மதுப் பிரமாணங்களை மீறிக் கருமஞ்செய்வோர் சிலரையாயினும் அகப்படுத்தித் தண்டனைக்குள்ளாக்க வேணுமென்ற கொள்கை உண்டெனக் கேள்வி. அங்ஙனமானால் மதுப்பரிசோதகர்கள் சில வியாச்சியங்களைத் தாமாய் ஆக்கி நீதிஸ்தலத்தில் அகப்படுத்திக் கொடுத்து அபராதிகளெனக் கண்டோரைத் தண்டிப்பிக்க வேண்டியும் ஏற்படும். ஆனால் பொலிசருக்கு அப்படியான நிபந்தனை ஒன்றும் இல்லையே.

நமது யாழ்ப்பாணத்திலே பொலிஸ் பகுதியினருக்கும், ஊரவர்களுக்கும், ஊரவர்களுள்ளும் மோட்டாரதச் சங்கத்தார்க்குமிடையே பரஸ்பரம் குரோதமும் அவநம்பிக்கையும் அதிகரித்து வரலாயின. சென்ற செவ்வாய்க்கிழமை மோட்டாரத சங்கத்தலைவராயுள்ள ஸ்ரீ. எதிர்வீரசிங்கம் என்பவர்க்கு விரோதமாக, பலகுற்றச்சாட்டுக்களைப் பாரித்துப் பொலிசார் தொடர்ந்த வியாச்சியம் விசாரணை செய்யப்பட்டது அவ்விசாரணை வரலாற்றை இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். ஈற்றில் தீர்ப்பு எப்படி முடிந்தது? குறித்த எதிர்வீரசிங்கம் எனப்படும் வாலிபர் நிரபராதியெனக் காணப்பட்டு விடுதலையடைந்தார் ஆனால் பொலிஸ் பரிசோதகர் ஒருவரை நியாயவாதி மிஸ்டர் சந்திரசேகர கேட்ட கேள்விகளும் அக்கேள்விகளுக்கு அவர் சொன்ன மறுமொழிகளும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மாட்டுள்ள குறைகளை வெள்ளிடைமலைபோல் ஊரவர்கட்கும் நீதிபதிக்கும் அறியும்பிறர்க்கும் புலப்படுத்திவிட்டனஅல்லவா! பொலிஸ்பகுதியாரின்சாட்சியாக முற்பட்டுவந்த சிங்களச்சாரதியாகிய ஆர்லிஸ் சில்வா தனக்கு நிகழ்த்திய குறுக்குக் கேள்விகளுக்கு இறுத்த விடைகளிலிருந்து அவன் எப்படிப்பட்டவனென்பதும் அவன் சொல்லும் சாட்சியம் நீதிஸ்தலத்தில் எவ்வளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படுமென்பதும் சாமானியர்க்கும் புலப்படுமல்லவா! மோட்டர் பஸ் விஷயமாக, ஸ்ரீ. எதிர்வீரசிங்கமென்பவர் செய்த ஒழுங்குகளும் வகுத்த பிரமாணங்களும் பிறவும், பிரயாணிகள் பஸ்சொந்தக்காரர், செலுத்துவோர் முதலாம் எல்லாருக்கும் நன்மை பயப்பன என்பதையும், பொலிசருக்கும் பெரும் உதவியாக உள்ளன என்பதையும் நீதிஸ்தலத்தில் முறைப்பாட்டுக் காரனாகிய பொலிஸ் பரிசோதகரும் ஒத்துக்கொண்டாரே. அப்படியானல் பொலிசர் குறித்த எதிர்வீரசிங்கமென்பவரை மேலும் மேலும் ஊக்கப்படுத்தி அவரையும் தமக்குத் துணையாகக் கொண்டு தம் கடமையைச் செவ்வனே செய்வதையொழித்து, அவரைக் குற்றவாளியாகக் கண்டு தண்டனைக் குள்ளாக்கமுயற்சிசெய்வதேனோ? குற்றம் கலகங்களை நீக்கிச் சமாதானத்தை ஆக்கவேண்டு மென்ற கடப்பாடுபூண்ட பொலிசர்கள் அதற்கு நேர் விரோதமாகக் குற்றங்களையும் கலகங்களையும் ஆக்க முயலுதல் வேலி பயிரை மேயத்தலைப்பட்டமை போலாகுமன்றோ!

இவை மாத்திரமன்றி யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகம் மாறி வந்த பொலிஸ் உத்தியோகத்தார், யாழ்ப்பாணம் மணற்றிடரானதாற்போலும் இங்கேயே பொறுத்துக் கொண்டார்களாமே. நன்மைக்குந் தீமைக்கும் எவற்றிற்கும் யாழ்ப்பாணம் வசதியான ஊர்போலும், இந்த யாழ்ப்பாணம் குற்றம் கலகம் இராசத்துரோகமான செயல் குறைந்தநாடென்பதும் இங்குள்ளார் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் விஷயத்திற் பொலிசருக்குத் துணைபுரியும் விருப்பம் பூண்டவர்களென்பதும்முந்தி இங்கே பொலிஸ் தலைவராகவிருந்த மிஸ்டர் றட், பின்னர் இருந்த கப்ரின்ன நோட்லி முதலிய உத்தியோகத்தர்களுடைய கொள்கையாக இருந்தது இப்பொழுது அக்கொள்கைக்கு நேர் மாறான அபிப்பிராயம் ஏற்படுவதேனோ, அறியேம்.

## எதிர்வீரசிங்கத்தின் வழக்கு.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீர் எப்போது இந்த வழக்கை வைத்தீர்?—நான் காலை வைத்தேன், எதிரி பின்னேரம் தந்தி அனுப்பினார்.

எதிரி வடஇலங்கைச் சகலரதசகாயத்தின் தலைவர் என்பது உமக்குத் தெரியுமா?—அவர் அப்படித்தான் தம்மைச் சொல்லிக்கொள்கிறார். இந்த யாழ்ப்பாணத்தில் பல்வேறு சங்கங்களின் தலைவர் தாம் என்று பலர் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். சென்ற வருஷம் நியாயவாதி T. R. நல்லையா பஸ் சங்கத்தின் தலைவராயிருந்தார்.

சகலரதச் சகாயச்சங்கத்தாரால் அச்சிடப்பட்ட சங்கப் பிரமாணங்களையும் விதானங்களையும் நீர் கண்டதுண்டோ?—ஆம்; அவை நல்லவை தான்............

அப்படிப்பட்ட சங்கத்திற்குப் பணம் ஆவசியகம் தேவை என்பதும் உமக்குத் தெரியும்?—ஜனங்களை வெருட்டிப் பணம் பெறுவதை ஆட்சேபிக்கிறேன்.

சங்கம் தனக்குரிய பணத்தைச் சேகரித்துத் தரும்படி ஒரு ஆளை வைத்திருப்பதை நீர் ஆட்சேபிக்கின்றீரா?—அவர்கள் எவரேனும் தம்பணத்தைச் சேகரிக்கலாம். ஆனால் காலைக் குத்தகைக்காரனுக்கு வசதியீனத்தை உண்டுபண்ணவொண்ணாது.

அவர் என்ன வசதியீனம் கொடுக்கிறார்?—வாடகைப் பணத்தைக் குறைக்கும் படியும் குறைக்காத பட்சத்தில் காலையைப் பகிஷ்கரிப்பதாகவும் எதிரி குத்தகைக் காரரை வெருட்டியிருக்கிறார்.

காலையைப் பகிஷ்கரிப்பேன் என்று அவர் கூறினால், நன்னடத்தைப் பிணையில் விடவேண்டும் என்பதா உம் கொள்கை?—அவர் இன்னோர் காலையைத் தொடங்குவதாகக் கூறினார்; அதனால் சமாதான பங்கம் ஏற்படும்.

அரசாங்கசபையைப் பகிஷ்கரித்த யாழ்ப்பாணத்தவர் எல்லோர் மீதும் நீர் வழக்குத் தொடர்ந்திருந்தால் அரசினருக்கு நன்மை செய்தவராயிருப்பீரே?—ஆனால் இப்போது எல்லோரும் அங்கே போக முயற்சிக்கிறார்களே!

பஸ்காலையில் கூட்டம் கூடுதல் சட்டவிரோதமானதா? கூட்டினால் நீர் அவர்மீது வழக்குத் தொடர்வீரா?—நான் வழக்குத் தொடரமாட்டேன். ஆனால் அவரைப்பற்றிசங்கத்தலைவருக்கு அறிவிப்பேன்.

காலைக் குத்தகைக் காரரை வாடகைப்பணத்தைக் குறைக்கும்படி அவர் கேட்டால் நீர் வழக்குத் தொடர்வீரா?—வாடகைப் பணம் கொடாத சாரதிமீதும், அதற்கு உதவி செய்தார் என இவர்மீதும் வழக்குத் தொடருவேன்.

காலைக்குத்தகை கொடுக்காத எந்தச் சாரதி மீதும் நீர் வழக்குத் தொடர்ந்ததுண்டோ?—இல்லை.

காலை வாடகையைக் குறைக்கவேண்டும் என்று கேட்டதா நீர் அவரை நன்னடத்தைப் பிணையில்விடவேண்டும் என்பதன் காரணம்?—ஆம்.

ஏன்?—அவருடைய கேள்வி சமாதான பங்கம் விளைக்கும் என எண்ணினேன்.

பஸ்வண்டிகளைச் செலுத்தவேண்டாம் என்று எதிரி பஸ்சாரதிகளுக்குச் சொன்னால், அவரை நன்னடத்தைப்பிணையில் விடவேண்டுமா?—அது பொது ஜனங்களுக்கு வசதியீனத்தை யுண்டுபண்ண ஏதுவாகுமாதலால் அவரை நன்னடத்தைப் பிணையில் விடவேண்டும்.

இந்த எதிரியைப் பொலிசர் சிறையாக்கிக் கைவிலங்கிட்டுப் பொலிஸ் தானத்துக்கு நடத்திச் சென்றார்கள்?—ஆம்.

நீரே இதற்குப் பொறுப்பாகவிருந்தால், அவருக்குக் கைவிலங்கிட்டிருப்பீரோ?—ஆம்.

சிறையானபின், எதிரி நேரே பொலிஸ்தானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாரோ? அல்லது சுற்றுவழியாக இட்டுச் செல்லப் பட்டாரோ?—அவர் எந்தவழியாகக் கொண்டுபோகப்பட்டார் என்பது எனக்குத் தெரியாது. இவரைச் சிறையாக்கிய உத்தியோகத்தரே அதனை விளக்க வேண்டும்.

ஒருவரைச் சிறையாக்கினால், அவரை இரகசியமாகவே அழைத்துச் செல்லல் வேண்டுமா?—ஆம்; மிக்க சாவதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் அவரை அழைத்துச் செல்லல் வேண்டும்.

அவர் எப்போது கைவிலங்கிடப்பட்டார், பஸ்களைச் செலுத்தவேண்டாம் என்று சாரதிகளை எப்போது கேட்டார் என்பனவற்றைப் பற்றி உமக்குத் தெரிந்ததேதும் உண்டா?—அவருக்குக் கைவிலங்கிடமுன்னரே, அவர் சாரதிகளுக்குக் கட்டளையிட்டார்.

வெலிக்கலா என்பவனைச் சாரதிகள் வெருட்டினரா?—ஆம்; அதற்கு எதிரியே காரணர்; அவர்தான் அப்படிச் செய்யும்படி அவர்களைத் தூண்டினார்.

எப்படி வெலிக்கலாவிற்குச் சரீர தீங்கு இழைத்தனர்?—அதைப்பற்றி அவன் என்னிடம் கூறவில்லை.

சங்கத்து அங்கத்தவர் செய்யும் பிழைக்குத் தலைவர் தான் பொறுப்பு என்பதா உமது கொள்கை?—ஆம்

உம்முடைய கொள்கை நூதனமாயிருக்கின்றது?—மறுமொழி இல்லை.

உமக்குக் கீழுள்ள பொலிசாரின் துட்டத்தனத்திற்கு உம்மைப் பொறுப்பாளி என்று கூறலாமா?—ஏதும் ஒன்கூறச் செய்யும்படி நான் அவர்களைத் தூண்டினால், அதனுக்கு வருவன வற்றிற்கு நானே பொறுப்பாளி ஆவேன்.

சகலரதச் சகாயச் சங்கத்துச் சாரதிகளே தன்னை வெருட்டினார்களென்று ஆர்லிஸ் சில்வா கூறுகிறான். ஆனால் இந்த எதிரியே அவனை வெருட்டினார் என்பதற்கு ஒரு சாட்சியும் இல்லையே?—இந்த எதிரிக்கு மாறாகக் குறித்த ஓர் குற்றச் சாட்டும் இல்லை;

பகவத்சிங் என்று சொல்கிறீரே; அவரைப்பற்றி உமக்குத் தெரியுமா?—தெரியாது; அவரைப் பற்றிப் பத்திரிகைகளிற் படித்திருக்கிறேன்:

பகவத்சிங் பொலிசாருக்கு மாறாகக் கருமம் செய்தவனா?—தெரியாது.

பகவத்சிங்கைப்பற்றி யாழ்ப்பாணத்தில் அநேகருக்குத் தெரியுமா?—அவர் பிரிட்டிஷ் அரசினரால் தூக்கிக் கொலை செய்யப் பட்டார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்,

எதிரிக்குப் பிறப்பித்த கட்டளையில், அவரைப் பகவத்சிங், அல்லது காந்தி எனப் பெயர் சொல்லியது, ஆகாத செயல் அல்லவா?—அதிகாரியைச் சில பஸ் சாரதிகள் "காந்தி" என்றும்பகவத்சிங் என்றும்சொல்லுகிறார்கள்

காந்தி அகிம்சையைக் கைக் கொண்டவர் என்பது உமக்குத் தெரியுமா?—தெரியும்.

பகவத்சிங் என்று எதிரியைப் பொலிசார் சொன்னது நீதியன்று அல்லவா?—இல்லை.

பகவத்சிங் என ஒருவர் தம்மைச் சொல்லிக் கொண்டால், அவர் மீது வழக்குத்தொடுவீரா?—மறுமொழி இல்லை.

சின்னையா அப்புகாமியைச் சுட்டுக் கொல்வதாக எதிரி சொன்னாரா?—ஆம்; அப்படித்தான் எனக்கு முறைப்பாடு கிடைத்தது.

துப்பாக்கி முதலாம் ஆயுதங்களை இந்த எதிரி உபயோகித்தறியார் என்பதை நீர் அறிந்திருக்கவில்லையா?—தெரியாது.

காந்தி என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர் துப்பாக்கி எடுக்க மாட்டார்?—என்னால் அதைப்பற்றிச் சொல்ல முடியாது.

பகவத்சிங் யார் என்பதும், அவர் ஏன் கொல்லப்பட்டார் என்பதும் நீர் எனக்குச்சொல்ல வேண்டும்.—தெரியாது.

எதிரி பொலிஸ்தானத்தை எரித்து விடுவேன் என்றார் என்கிறீர்; உண்மையாகவே அவர் எரித்து விடுவார் என்றுபயந்தீரா?—யாரோ ஓர் பைத்தியகாரன் பேச்சு என்றுதான் முதலில் எண்ணினேன்; எதிரி அதை ஓர் பொலிசுக்குச் சொன்னார்,

பொலிஸ்தானத்தை — அதுவும் பரிசோதகர் பார்ஞர்த்துவின் பொறுப்பிலுள்ள ஒரு தாபனத்தை—எரித்து விடுவேன் என்று ஒருவர் சொன்னால் நீர் நம்பிவிடக் கூடுமா? —நான் அந்தக் கதையைப் பைத்தியப் பேச்சென்று தள்ளி விட்டேன்.

பொலிஸ் அதிகாரியின் சிரத்தை எடுத்து விடுவதாக எதிரி சொன்னார் என்கிறீர்! அதிகாரியின் தலை அவருக்கு எதற்கு? அந்தத் தலையில் ஏதும் வைத்திய சோதனை செய்வதற்காகவோ?—அதிகாரியின் சிரம் எடுப்பதென்பது முடியாத காரியம், ஆனால் எதிரி அப்படிச் சொன்னார் என்பதை நம்பினேன்.

சென்ற 17 ம் தேதி மிஸ்டர் குணசிங்க, மிஸ்டர் தஸநாயக்கா, முதலியோரின் விஜயத்தை யிட்டு அவர்களைக் கண்ணியப் படுத்துவான் பொருட்டு, பஸ்வண்டி ஒன்றும் ஓடாது முற்றவெளியில் நிரையாக நின்றன. அரசினரால் மிகவும் கௌரவப் படுத்தப் பட்ட பிரபுவாகிய மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரையவர்களும், நானும் [ஸ்ரீ சந்திரசேகரா] சாரதிகளுக்குப் பிரசங்கம் செய்தோம். அது உமக்குத் தெரியுமா? அதைப்பற்றிக் கேள்விப்பட்டேன்.

ஓர் நல்ல உத்தியோகத்தரின் கீழ் யாழ்ப்பாணம் பொலிசர் இருக்கின்றனர் என்று நான் அப்போது குறிப்பிட்டேன், தெரியுமா?—தெரியாது.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்.)

# "பொலிஸ்தானத்தை எரித்துவிடுவேன்" என்றூராம்!

## கை விலங்கிட்டுத் தெருவழியே நடத்திச் சென்றது ஏன்?

## எதிர்வீரசிங்கத்தின்மீது வழக்கு; பரிசோதகரின் குறுக்கு விசாரணை

## விசாரணை முடிவில் எதிரி விடுதலை.

சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலம் எங்கணும் எள்ளிட இடமின்றிச் சனங்கள் நிறைந்திருந்தனர். வட இலங்கைச் சகலாத சகாயச் சங்கத்தலைவரான ஸ்ரீ எதிர்வீரசிங்கத்தின்மீது பொலிசர் வைத்துள்ள வழக்கு விசாரணைத் தினம் அன்றூகும். அன்னவர்மீது பொலிசார் சுமத்திய குற்றங்களாவன:—

(1) பஸ்காலைக் குத்தகைக்காரருக்குப் பணம் கொடுக்கவேண்டாமென பஸ் சொந்தக்காரரையும் சாரதிகளையும் தூண்டியது.

(2) பலாத்காரமாகப் பஸ்காலையில் கூட்டம் வைத்து, அதனுல் குத்தகைக்காரர் தமது வாடகைப் பணத்தை அறவிடாது தடுத்தல்.

(3) 7-1-34இல் பஸ்சாரதிகளுக்குச் செய்த பிரசங்கத்தினுல், ஓர்பஸ்வண்டி யாவதுஓடவில்லை இதனுற் பொது ஜனங்களுக்குப் பெரும் அசதியீனம் ஏற்படுத்தியமை.

(4) ஜேம்ஸ் வெலிக்கலா என்பவனைச் சங்கத்திற் சேரும்படி வற்புறுத்தியமை; அவன் சேரமறுத்தால் அவனுக்குச் சரீர தீங்கு இழைக்கும்படி மற்றையோரைத் தூண்டிவிட்டமை.

(5) 24-ம் தேதி சில ககாதவர்களுடன் பஸ்காலைக்குட்சென்று பஸ் சாரதிகளிடம் பணம் அறவிட்டார்; அதனுல் குத்தகைக்காரர் தமது வாடகைப்பணத்தை அறவிடாது தடுத்தமை.

(6) ஆறுமுகம் கந்தசாமி என்னும் பஸ் சாரதிக்குச் சரீரதீங்கு இழைக்கும்படி பஸ் சாரதிகளையும் ஏனைய தகாதவர்களையும் தூண்டிவிட்டமை.

(7) தமது சங்கத்தின் பிரமாணங்களுக்கமைய நடக்காவிட்டால், ஆர்லிஸ் சில்வாவின் பஸ் எரிக்கப்பட்டுவிடுமென்று அவனை வெருட்டத் தகாதவர்களைத் தூண்டி விட்டமை.

(8) சங்கத்தின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாவிட்டால் சுட்டுவிடுவதாகச் சினிஸ் அப்புஹாமியைப் பயமுறுத்தியமை.

(9) சமாதான பங்கம் விளைப்பதற்கேதுவாகச் சென்ற 5-ம் தேதி பஸ்சாரதிகளுக்குப் பிரசங்கம் செய்தமை

ஸ்ரீ எதிர்வீரசிங்கத்திற்காக நியாயவாதி மிஸ்ரர் ஏச். ஏ. பீ. சந்திரசேகராவும், நியாயவாதி ஸ்ரீ எஸ். ஆர். கனகநாயகமும்; நியாயதுரந்தரர் மிஸ்ரர் எஸ். ஏ. சபாபதியும் ஏற்பட்டனர்.

எதிரி காந்திக்குல்லா அணிந்துகொண்டே நீதிஸ்தலத்திற் சமுகமாயினர். அதனை அகற்றும்படி நீதிபதி மிஸ்ரர் முனிசிங்கி கட்டளையிட்டனர். காந்திக்குல்லா தமது ஜாதிய உடையின் ஓர் பகுதியானமையால், தாம் அகற்றமுடியாது என்று எதிரி சொன்னுர். நியாயவாதி மிஸ்ரர் சந்திரசேகரா, நீதிபதியை நோக்கி, "ஐயா, இந்தக் குல்லா, ஹிந்துக்களின் ஜாதிய உடையின் ஓர் பகுதியானமையால், அதை அகற்ற வேண்டுமென்று தாங்கள் கட்டளையிடுவதை நான் ஆட்சேபிக்கிறேன். முந்தி, நீதிபதி மிஸ்ரர் ஒருட்றிகோ அதனை அகற்றுமாறு கட்டளையிட்டபோது எதிரி விளங்காக் காரணத்தால் அகற்றிவிட்டார் ஓர் சிங்களப் பிரபுவின் தேசிய ஆடையில் ஓர் பகுதியாகிய தலைச்சீப்பை அகற்றச்சொல்லுதல் நீதியல்ல. ஆனுல், தாங்கள் குல்லாவை அகற்றத்தான வேண்டுமென வற்புறுத்தினுல், அப்படிச் செய்யும்படி எதிரிக்குச் சொல்லுகிறேன்" என்றூர்.

நீதிபதி:- முந்திச் செய்தமாதிரி, இப்போதும் அதனை அகற்றுதல் நன்று:

எதிரி:- இந்தக் குல்லாவை அகற்றுவதிலும் பார்க்கச் சிறைக்குச் செல்வதே மேல் என்று எண்ணுவேன் இதனை அகற்றச் சொன்னுல், எனது சட்டையையும் அகற்றிவிட்டுப் பாதி நிர்வாணமாய் நீதிஸ்தலத்தில் நிற்பேன்.

பின்னர் நியாயவாதியின் ஆலோசனையின் பேரில் அவர் தமது குல்லாவை அகற்றினுர்.

இதன்பின் பொலிஸ் பரிசோதகர் ஜே. எச். ஏ. பர்ணுந்து தமது வாக்குமூலத்தைப் பின்வருமாறு கொடுத்தார்:

"எதிரியாகிய எதிர்வீரசிங்கம், பஸ்காலைக்கு வந்து அடிக்கடி கூட்டங்கள் வைப்பதால், தனது வாடகைப் பணத்தை அறவிடமுடியவில்லையென்றும், எதிரி குறித்த பஸ்காலைக்கு மாறாக இன்னுெர் பஸ்காலை நிறுவுவதாகப் பயமுறுத்தினுர் என்றும், அதனுல் தன்பாடு கஷ்டமாய் முடிந்ததென்றும், பெரியகடை பஸ்காலைக் குத்தகைக்காரரான ஸ்ரீ ஆர். எம். வேலுப்பிள்ளை என்பவர் எனக்கு முறையிட்டார். ஜனவரிமாதம் 7-ம் தேதி எதிரி பஸ்காலையில் ஓர் பிரசங்கம் செய்தார். அதில் தான் கட்டளையிட்டால், பஸ்வண்டிகளைச் செலுத்தவொண்ணுதென்று, பஸ் சாரதிகள், கண்டக்டர்கள், முதலாளிமார் என்பவர்களுக்குக் கூறினுர். அத்துடன் பொலிஸ் பகுதியாரையும் அவர் கண்டபடி தூற்றினுர். ஜனவரி மாதம் 9-ம் தேதி காலை பஸ்கள் ஒன்றும் ஓடவில்லை, பஸ்காலைக்கு முன்னுல் உள்ள தெரு வண்டிச் சஞ்சாரத்துக்குத் தடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அதனுல் பெரும் கலகம் ஏற்படக்கூடும் என்றும் சீனிவாசகம் என்பவர் அறிவித்தார். நான் உடனே சில பொலிசாருடன் அங்கு சென்றேன். பஸ்சாரதிகளும் கண்டக்டர்மாரும் பஸ் முதலாளிமாரும், வண்டிச் சஞ்சாரத்துக்குத் தெருவைத் தடுப்பதையும், தொல்லை உண்டாக்க முயற்சிப்பதையும் கண்டேன். அவர்களுடன், நான் அதிகநேரம் நியாயங்களைப் பேசியபின், ஒருவாறு தெருவினின்றும் அவர்களை அகற்றினேன். 21-ம் தேதியன்று ஜேம்ஸ் வெலிக்கலா என்னும் ஒருவன் என்னிடம் வந்து, சகலாதச் சகாயச் சங்கத்திற் தான் சேராமையினுல், காரைநகர்ப் பஸ்காரர் எல்லோரும் தன்னை வெருட்டினுர்கள் என்றும், எதிரியும் வில்லங்கப்படுத்தினுர் என்றும்,எனக்கு முறையிட்டான். குறித்த சங்கத்திற் சேராவிட்டால் தனக்குச் சரீர தீங்கும் இழைப்பதாக இவர்கள் பயமுறுத்தினர் என்று அவன் எனக்குச் சொன்னுன். இவனைப்போலவே ஆறுமுகமும் கந்தசுவாமி என்பவனும் முறையிட்டான்.

"பிப்ரவரி மாதம் 4-ம் தேதி ஆர்ணலிஸ் சில்வா என்னும் ஒருவன் எதிரியைப்பற்றி என்னிடம் முறையிட்டான்.

"எதிரியானவர் H 998-ம் இலக்கம் கொண்ட பஸ் சாரதியிடம் சென்று, 'பகத்சிங் செய்ததுபோல உன்னைச் சுட்டுக்கொன்றுபோடுவேன், தெரியுமா?' என்று பயமுறுத்தினுர் என்று ஆர்ணலிஸ் ஸில்வா எனக்குக் கூறினுன். பெரியகடைப் பஸ்காலையில் எதிரி பிரசங்கம் செய்கிறுர் என்றும், தன் சொற்படியே பஸ் சாரதிகளை நடக்கச் சொல்லுகிறுர் என்றும் பொலிஸ் பொன்னையா பிப்ரவரி மாதம் 5-ம் தேதி என்னிடம் வந்து சொன்னுர், பொலிஸ்தானத்தை எரித்துப் பொலிஸ் அதிகாரியின் சிரத்தை எடுத்துப் போடுவதாக எதிரி சாரதிகளுக்குக் கூறினுர். அதுமாத்திரமன்றி, அவர் பொலிசாரைக் கண்டபடி தூற்றினுர். இன்னும் பொலிசார் பஸ் சாரதிகளையும் கண்டக்டர்மாரையும் வருத்தி அவர்களுக்குத் துன்பம் விளைக்கின்றனர் என்று எதிரி தலைமைப் பொலிஸ் அதிகாரிக்கும் தந்தி அனுப்பினுர். ஆனுல், நான் உடனே விசாரணை செய்த அளவில், ஒரு சாரதியேனும் கண்டக்டரேனும் பொலிசாரைப்பற்றிக் குறை கூறவில்லை. எதிரி வட இலங்கை சகலாத சகாயச் சங்கத்தின் தலைவர் எனச் சொல்லப்படுகிறது. அவர் 17-ம் தேதி பஸ்களை ஓடவிடாது தடுத்தார். சமாதான பங்கம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் என் மனத்திலும், சில சாரதிகள் மனத்திலும் எப்போதும் குடிகொண்டிருந்தது.

### மிஸ்ரர் சந்திரசேகராவின் குறுக்குவிசாரணை.

கேள்வி:- பொலிசர் சாரதிகளையும் சொந்தக்காரரையும் வருத்துகின்றனர் என்ற தந்தி 6-ந் தேதி கொழும்புத் தலைமை அதிகாரிக்கு அனுப்பப்பட்டது?—ஆம்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## இந்தியச் செய்திகள்.

### கலேல்காருக்கு 2 வருஷம்.

சென்ற வெள்ளிக்கிழமை சிறையாகிய பிரபல தேசியத்தலைவரான காகா கலேல்கார் அவர்கள் சென்ற சனிக்கிழமை ஆமதபாத் டிஸ்திறிக் நீதிபதியால் விசாரித்து 2 வருஷக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். 24 மணித்தியாலங்களுக்குள் ஆமதபாத் நகரை விட்டு வெளியேற வேண்டுமென்றகட்டளையை மீறியதே ஸ்ரீ கலேல்கார் அவர்கள் மீதுள்ள குற்றமாம்! சமாதானம் நிலவவேண்டிய இக்காலத்தில் இந்திய அரசினர் வீண்சாக்குப் போக்குகள் சொல்லி ஜனத்தலைவர்களைப் பிடிப்பதும் சிறையில் அடைப்பதும், ஈற்றில் தமக்கே கேடுவிளைக்க ஏதுவாகும் என்பதை இன்னும் அறிாததேனோ?

### பண்டித ஜவஹர்லால்.

இருவருஷம் வெறுங் காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தற்போது அலிப்பூர் மத்திய சிறைக் கூடத்தில் வைக்கப்பட்டிருக்கிறுர். பண்டிதர்க்கு இந்திய அரசினர் சிறைத்தண்டனையளித்தமையைக் கண்டிக்கும் நோக்கமாக இராமநாதபுரம், திருநெல்வேலி, காஞ்சி முதலாம் இடங்களில் உள்ள வியாபார நிலையங்கள் யாவும் மூடப்பட்டன.

### தீண்டாதார் ஹிந்துக்களா?

தீண்டாதார் ஆலயப் பிரவேச மசோதா சம்பந்தமாகப் பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காகத் திருப்பூர் தாசில்தார் அவ்வூர்ப் பிரமுகரை அழைத்த அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டார். சிலர் மசோதாவுக்குச் சாதகமாகவும், சிலர் பாதகமாகவும் அபிப்பிராயம் கூறினர். நியாயவாதிகள் சங்கத் தலைவரான பிரமஸ்ரீ வி. பி. சுப்பிரமணியஐயர் அவர்கள், தீண்டாதார் ஹிந்துக்களா என்பதைப்பற்றி முதல் தீர்மானம் செய்யவேண்டுமென்றும், குறிக்கப்பட்ட ஆகமவிதிகளுக்கமைய ஒழுகும் ஹிந்துக்களுக்கே ஆலயப் பிரவேச உரிமையுண்டாதலல் அந்த விதிகளை அநுட்டிக்காததீண்டாதார்க்கு ஆலயப்பிரவேச உரிமை இல்லையென்றும் வாதாடினுர். இன்னும் இந்த மசோதா 1857-ம் ஆண்டு விக்ரோறியா மகாராணி அளித்த உத்தரவாதத்திற்கு மாறனதாகும் என்று கூறினுர்.

### பாரதநாட்டில் தீண்டாதார் முன்னேற்றம்.

"நான் ஒருநாள் ஓர் ஹரிஜனக் கிராமத்திற்குத் திடீர் என்று சென்றேன். நான் அங்கு அநேககுடிசைகளைப் பார்வையிட்டேன். என்ன புதிசம்! என்ன தூய்மை! இற்றைக்குச் சில மாதங்களுக்குமுன் அழுக்குநிறைந்திருந்த குடிசைகள் யாவும் இப்போது தேவலோகம் என விளங்குகின்றன. மகாத்மாவின் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தின்பின், அக்கரைப்பிரகப்பற்றி ஹரிஜனசேவைக்காக தீண்டாதார் மத்தியில் வசிக்கும்ஓர் பிராமணேர் தயாதம் அவர் மனைவியதும் நன்முயற்சியாலேயே இவ்வளவு அழகாக இந்தக்கிராமம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இப்படியே இந்தப் பாரதநாட்டில் உள்ள ஹரிஜனங்களை முன்னேற்றப்படுத்த உயர்ஜாதி ஹிந்துக்கள் முற்படவேண்டும்" என்று மிஸ் மூரியல் லிஸ்ரர் 'ஹிந்து'' பத்திரிகைக்கு எழுதிய ஓர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறுர்!

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனாவர்களால் யாழ்ப்பாணம் மரக்காலையில் 1934ம் ஆண்டு மாசி மாதம் 27ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 - 30 மணிக்கு விற்கப்படும்:—

Lat I. 50பாலைமரங்கள்.
Lat II 16 முதிரை மரங்கள்.

ஏனைய விபரங்களை யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்:—

A. B. LUSHINGTON.
வனபரிபாலனர்.

வனபரிபாலனாஆபீஸ்,
கொழும்பு, 29 - 1 - 34.
G. 42. 22 - 2 - 34.

## அறிவித்தல்.

கீழ் மாகாணத்தைச் சேர்ந்த, திரிகோணமலைப்பகுதி தம்பலகாமக் கடாவில், 1934ம் ஆண்டு பங்குனி மாதம் 1ந் திகதி தொடக்கம் 1937ம் ஆண்டு மாசி மாதம் 28ந் திகதிவரை முகத்துக்குவிடும் குத்தகைக்கு, 1934ம் ஆண்டு மாசி மாதம் 23-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 12 மணிவரை கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகின்றது.

இக்குத்தகையை வாங்க உத்தேசிப்பவர்கள் மற்றும் விபரங்களுக்கு 1934ம் ஆண்டு மாசிமாதம் 9ந் திகதி அரசாட்சி கெசற் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கேள்விப்பத்திர கொடிதிகளைப் பார்க்கவேண்டும், அல்லது திரிகோணமலைக் கச்சேரிக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

எம். கே. ரி. சாண்டிஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு
திரிகோணமலை.

திரிகோணமலைக்கச்சேரி,
1934ம்ஆண்டு மாசிமாதம் 3ந்திகதி.
(G. 41. 15&22-2 34.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறுர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாக்காவரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அயபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் நீரிழிவு,நீர்க்கடுப்பு,நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாகின்ற கும் பக்ஷவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மணிஓடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு
Y 179. 1-1-34 to 31-12-34) சிலோன்.

## மலேரியா மஹாதைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலைச்சுரம் தணியவேண்டில் இத்தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வுரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானேர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், தேக எரிவு, 'ஹிஸ்ரியா'' வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,
பொ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
(Y. 204. 12-2—11-2-35)

## வெளி வந்துவிட்டது!



கந்தபுராணம்—நகரழிபடலவுரை
[1934-ம் 35-ம் ஆண்டுக்கு கேம்பிரிஜ் ஜூனியர்ப் பாடமாகவுள்ளது]

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கிலமொழிபெயர்ப்பு. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதியுள்ள நூலாசிரியர் வரலாறு என்னுமிவைகளுடன், வெளிவந்துவிட்டது.

☞ விலை சதம் 50.

ஐந்து பிரதிகளை ஒரே முறையில் வாங்குவர்களுக்கு 1 பிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும்.

வண்ணார்பண்ணை 23-12-33. — மானேஜர், இந்துசாதனம்.

# உபதேச காண்டம்.

ஏழாவது

## பஞ்சாக்கர பான்மியச் சருக்கம்.

(முற்றொடர்)

"நைமிசவன முனிவர்களே, பஞ்சாக்கரத்தின் மகத்துவத்தை விளக்கும் இன்னும் ஒரு கதை சொல்லுகிறேன்; கேளுங்கள்: கௌசிகம் என்னும் நாட்டிலே விக்கிரமபுரம் எனப்படுஞ் சிறந்த பட்டினம் ஒன்று உண்டு அங்கே பிராமண குலத்துதித்த ஆநந்தன், சூரியசன்மன் என்னுமிருவர் பரம்பரம் பகைமை கொண்டவர்களாயிருந்தார்கள்; அவ்விருவருள்ளும் ஆநந்தன் என்பவன் பொல்லாத வஞ்சகன்; அவன் தன் பகைவனாகிய சூரியசன்மாவை நேரில் வெல்வது அசாத்தியமெனக்கண்டு, வஞ்சனையால் வெல்லக் கருதி, உபாயஞ் சூழ்ந்துகொண்டு, அச்சூரியசன்மா ஏகாந்தமாயிருக்குஞ் சமையம்பார்த்து அவனையடைந்து, அவனுடைய அடிகளில் வீழ்ந்து வணங்கி, தான் முன்னர் அவனுக்குச் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்துத் தனக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துதல் வேண்டுமென்று இரந்தான் பெருங்குணம் பூண்டவனும் அறிவிற் சிறந்தவனுமாகிய சூரியசன்மா, ஆநந்தனுடைய கபட சிந்தையை அறியாதவனாய், அவன் சொல்வன நிசமெனநம்பி அவன்மீது கருணைகொண்டு "ஆநந்தனே, நீ வருந்தற்க; முன்பு நீ செய்த பிழையனைத்தையும் பொறுத்துக்கொண்டேன்" என்று சொல்லி, அவனைத் தன்பக்கலில் இருக்கும்படி பணித்தான்.

அப்பொழுது ஆநந்தன் அவனருகில் இருப்பதற்குக் கூசுபவன்போல் நடித்து "ஐய, உம்முடன் சமாசனம் வகிப்பதற்கு நான் அருகனல்லேன்; உமது குற்றேவலைச் செய்துகொண்டிருக்க விரும்புகின்றேன்; புலையனாகிய யான் செய்த பிழையனைத்தையும் பொறுத்து நாயேனை ஆட்கொண்டருளவேண்டும்" என்று பின்னரும் இரந்து ஒதுங்கி நின்றான். அவன் அங்ஙனஞ் சொல்லக்கேட்ட சூரியசன்மா அவன்மீது பெரிதும் பரிவுற்று "ஆநந்தனே, இன்றுதொட்டு உன்னை எனது நெருங்கிய சுற்றமாக மதித்துள்ளேன்; மேலும் நீயே எனது உற்ற நண்பன்; கவலைப்படவேண்டா" என்று கூறி அவனைத் தழுவி மிக்க அன்புபாராட்டினான்.

இவ்வவாறு இருவரும் நட்புப்பாராட்டி ஒழுகிவருநாளில், அற்றம் பார்த்திருந்தவனாகிய ஆநந்தன் ஒருதினம் சூரியசன்மனைப் பார்த்து "ஐய, மலைநாட்டிலுள்ளதாகிய நமது இப்பட்டினத்தில், இராக்காலத்திலே கொடிய புலிகள் வந்து சஞ்சரிக்கத் தலைப்பட்டுக்கொண்டன ஆதலால் நீர் இராக்காலத்தில் வெளியேசெல்லாது இல்லத்திற்றானே யிருப்பது நல்லது; நான் நடுயாமத்தில் வெளியேசென்று வேங்கைகள் பதுங்குமிடத்தைத் தெரிந்து மீண்டுவருவேன். அப்படிச் சென்றவிடத்து வேங்கை அகப்படின் உடனே ஓடிவந்து உம்மை எழுப்புவேன்; நீர் அப்பொழுது வில்லில் அம்பினைத் தொடுத்து எய்து அவற்றைக் கொன்றுவிடும்' என்று சொல்ல வஞ்சனையறியாத சூரியசன்மா அதற்கு ஒத்துக்கொண்டான்.

இங்ஙனஞ் சொல்லிச்சென்ற ஆநந்தன் சிறிதுதூரம் போய் ஒரு பசுவைப் பிடித்து அதன் உடம்பைப் புலித்தோலாற் போர்த்து நிற்கவிடுத்துச் சூரியசன்மாவிடம் ஓடிவந்து "புலி கண்ணுக்ககப்பட்டது; விரைந்துவந்து கொல்லுதிர்" எனலும் சூரியசன்மனும் அம்பு வில் ஏந்திய கையினனாய் முற்பட்டோடிச் சென்றான் ஆநந்தன் "அங்கே நிற்கின்றது புலி" யென்று சுட்டிக்காட்ட, சூரியசன்மா உடனே இலக்குத் தவறாமல் எய்து அதனை வதைத்தான். "என் மனோரதம் நிறைவேறியது; இனிமென்ன சூரியசன்மன் கோகத்தியாற் கெட்டான்" என்று ஆநந்தன் அகத்திற் பெரும் மகிழ்ச்சியடைந்தானாய்ப் பின்னரும் அவனைப்பார்த்து "நண்பரே, இந்த நடுயாமத்தில் நாங்கள் இருவரும் இன்னமும் புலிகள் அகப்படுமோ எனக் காத்துக்கொண்டு இங்கேயிருந்தால், எங்கள் வீட்டிற் சமையம்பார்த்து யாராயினுந் திருடர் புகுதல் கூடும்; ஆதலினால், நீர் இங்கேதானே இருக்க, நான் ஒருமுறை வீட்டிற்குப்போய் அவர்களைப் பாதுகாப்புடன் இருக்கச் சொல்லிவிட்டு வருகின்றேன்" என்றான். சூரியசன்மா அதற்கு உடன்படவே, துரோகியாகிய ஆநந்தன் உடனே சூரியசன்மாவின் இல்லத்தையடைந்து இல்லக்கிழத்தியை நோக்கி, "அம்மே, இங்கே திருடர் வருவர் ஆதலால் இவ்வீட்டினை விடுத்து இப்பொழுது தானே உன் மகன் வீட்டிற்குச் செல்லுதி; நான் துணையாக வருகின்றேன்" என்றுகூறி அவளை அழைத்துக்கொண்டுபோய் மகன் வீட்டில் உறங்கச்செய்தான். இங்ஙனஞ் செய்தபின், சூரியசன்மனுடைய மகனையும் மருகியையும் சூரியசன்மனுடைய வீட்டிற்குச் செல்லும்படி சொல்லி அங்கே கூட்டிக்கொண்டுவந்து சேர்த்து, "தம்பி, நீவிர் இருவரும் கபாடபந்தனஞ் செய்துகொண்டு படுத்து உறங்குதிர்; உம் பிதாவின குரலில் கள்வர் இங்கேவந்து உங்களைக் கூப்பிடுதல் கூடும்; ஆனால் நீவிர் பதில் சொல்லாமலும் கதவைத் திறவாமலும் படுத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

அவர்களை அவ்வாறு சயனிக்கச் சொல்லிவிட்டுப் பாதகனாகிய ஆநந்தன் பெருந்தன்மையுடைய சூரியசன்மா இருக்கும் இடத்திற்கு ஓடிச்சென்று வாயிற் கைவைத்து ஆ என்று பதறி ஏங்கி "ஐயா, உமது இல்லத்தில் இந்தநேரம் நடக்கும் விபரீதத்தை என்னென்று உமக்கு நான் வாய்விட்டுச் சொல்வது! இப்படியான அநியாயம் உலகில் எங்கேனும் உண்டோ!" என்று ஓலமிடுதலும், அதனைக்கேட்ட சூரியசன்மா பதைப்புடன் "ஆநந்தனே, நடந்ததென்ன? பயப்படாமல் உள்ளதை உள்ளபடி சொல்லுதி" என்றனன். "ஐயா, நான் சொன்னால் நீர் நம்பமாட்டீர்; நேரிற்போய்ப்பாரும்; உமது மனைவியென்றிருப்பவள் சோரனுடன் ஒருங்கு துயில்வதை நான் கண்ணாரக் கண்டேன்; அந்த விபரீதத்தைப் பார்க்கச் சகியாமல் இங்கு ஓடிவந்தேன்" என்று சொல்லித் துயரப்படுவான் போல் ஆநந்தன் நடித்தான் கேட்டமாத்திரத்தே சூரியசன்மன் இடிபொலிகேட்ட நாகம்போற் பதைத்தான்; அடங்காச் சீற்றங்கொண்டான்; மனமுடைந்தான்; நாணம் அடைந்தான்; ஈற்றில் தன்னை மறந்து கோபாவேசங்கொண்டான்; கூரியவாட்படையொன்றைக் கையிற் பிடித்தானாய் வாயுவேகமாகத் தன் கடிமனையடைந்து கதவிற் புடைத்தான். கதவு திறக்கப்படவில்லை; சூரியசன்மன் உள்ளத்திருந்த சந்தேகம் பெலப்பட அவன் மனசில் வர்மம் உண்டானது. உடனே சுவரிற் பாய்ந்தேறி முகட்டைப் பிரித்து உள்ளே புகுந்தான்; ஐயோ, பாவம், தன்மகனையும் மருகியையும் சோரனும் தன் மனைவியுமெனநினைத்து வாட்படையை ஓங்கி ஓரேவெட்டாக இருவரையும் வெட்டிவிட்டு வெளியேவந்து அப்பாற் போயினன்.

பொழுது புலர்ந்தது; மகன்வீட்டில் நித்திரைசெய்யச் சென்றவளாகிய சூரியசன்மன் மனையாள் மீண்டு தங்கள் இல்லத்திற்கு வந்தாள்; பந்திக்கப்பட்டிருந்த கதவை மனம் பதைபதைக்க ஒருவாறு வலிதில் திறந்தாள்; இரத்தப்பெருக்கிற் பிணமாய்க்கிடக்கும் மகனையும் மருகியையுங் கண்டாள்; அறிவுசோர்ந்து நிலத்தில் வீழ்ந்தாள்; பின் ஒருவாறு தேறினாள்; கைகளால் வயிற்றில் மோதிக் கதறினாள்; இரத்தச்சேற்றிற் கிடக்கும் தன் குமாரனைக் கையால் வாரியெடுத்து மடிமீது வளர்த்தினாள்; புலம்புகின்றாள்:

"கல்விக் கடலே! கலைஞான தீபமே!
செல்வக் கொழுந்தே! செழுநாண் மறைப் பொருப்பே!
சொல்வித் தகனே! என்தோன்றல்! உனையிதுநாட்
கொல்வித்த தாரென்று உணரேன்; குலம்முடிந்தேன்"

ஐயோ, இது என்ன கொடுமை! இந்தப் பழியை ஆர் செய்தார்! அடா, நான் பெற்ற மகனே, இது என்ன அநியாயமடா! ஆ! ஆ!! நான் பெருமல் வளர்த்த அருமை மகனே, நீங்கள் இருவருந்தான் என் கண்முன் பிரேதமாய்க் கிடக்கின்றீர்களா! நான் காணும் இப்பரிதாபமான காட்சி நிசமா! இல்லையேற் பொய்யா. அடா என் அருமைக் குழந்தாய், உன்னைப் பத்துமாதம் சுமந்து பாடுபட்டுப்பெற்ற பாவியின் வயிறு எரிகிறதடா! மனம் நடுங்குகிறதே! சரீரம் பதறுகிறதே! என் குலக்கொழுந்தே! பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமானே! உன்தாய் இப்படிநின்று பாதவிக்க, அம்மே, அழாதே, வருந்தாதே, என்று ஒரு வார்த்தை சொல்லவொண்ணுதா? கள்வருக்குப் பயந்து தன்னுயிர் காக்கவேண்டி இந்த வீட்டைவிட்டு உன் வீட்டிற்கு ஓடி அங்கே ஒளித்திருந்துகொண்டு உங்கள் இருவரையும் பலிகொடுத்த பாவியோடு என்ன பேச்சு, என்ன தொடர்பு, என்று வர்மம் பூண்டு என்னுடன் பேசாமற் கிடக்கின்றாயா? ஆ! மகனே, நான் கொடியவள்; இப்படி வருமென்று அறியேனடா! ஆ, என் அருமை மருமகளே; நான் சிறிது கவலைப்பட்டாலும் குறிப்பறிந்து ஓடிவந்து "மாமீ, கவலைப்படாதே என்று என்னைத் தேற்றுவாயே! எங்களை வாழ்விக்கவந்த குலக்கொடியே! உன் கணவனைவிட்டுப் பிரியமுடியாமல் உடன் மாண்டாயே! அந்தோ! நீயோ அவனை முதல்மாண்டது? அறியேனே. உன்னை அடைக்கலமாக என்னிடம் ஒப்புவித்துச்சென்ற உன் பெற்றோர் எங்கே எம் ஆசைமகள்" என்று கேட்டால், நான் அவர்களுக்கு என்ன உத்தரம் உரைப்பேன். ஐயோ, மக்காள் உங்களுக்கு நேர்ந்த கதியை என் கணவர் அறிந்தால் உயிர் வாழமாட்டாரே! தெய்வமே, இப்படியுஞ் சோதிக்கலாகுமா!" என்று இவ்வாறு அரற்றி இயங்கி அறிவழிந்து பின்னரும் நிலத்தில் வீழ்ந்தாள். மனையாளிட்ட ஓலத்தைக்கேட்டுச் சூரியசன்மாவும் அங்கே ஓடிவந்தான்.

—(தொடரும்.)

# கடிதங்கள்.

## வகுப்பு வாதிகளின் தடுமாற்றம்.

இந்துசாதனப்
பத்திராதிபர் அவர்களுக்கு:

ஐயா,

இந்தப் பெப்ரவரி மீ 15 உ வெளிவந்த இந்துசாதனப் பத்திரத்தில், ஆசிரியர் கூற்றாக தாங்கள் எழுதிய, கட்டுரை தேசத்தின் முன்னேற்றங்கருதிய எமது அடிமைத்திறம் நீங்கவேண்டுமென்னும் அவாக்கொண்ட, அபிமானிகளுக்குப் பெருவிருந்தாயும், கோடரிக்காம்புகளெனப்பிரித்தாளுங் கொள்கையுடையார் பரற்சிக்கி எமது அடிமைத்தளையை இன்னும் பந்திக்கக் கங்கணங் கட்டிநிற்கும் வகுப்புவாதிகளுக்குச் சவுக்கடியும் போலாகும் என்று கூறல் மிகையாகாது.

இந்த வகுப்புவாதிகள், தேர்தற்றினம் நெருங்க நெருங்கத் தங்கள் பழைய பல்லவியை மிகமும்முரமாகப் பாடத்தொடங்கிவிட்டனர்; 'ஐயோ, சிங்களர் எம்மை அடக்கி ஆளப்போகிறார்கள்; அவர்கள் தாங்கள் அதிகாரம் வகித்து தமிழராகிய எம்மை அடக்கியாள்வதற்காகவே, இப்போது அரசியற்றிருத்தம் வேண்டுமெனப் பிரிட்டிஷாரோடு வாதாடுகின்றனர். பொதுவாகச் சிறுபான்மைச் சாதியினருக்கு, சிறப்பாகத் தமிழ் மக்களும் உஜ்ஜீவிக்க வேண்டுமானால், பிரிட்டிஷ் அதிகாரம் இன்னும் நிலைத்திருக்க வேண்டும்; சிங்களர் கேட்கும் அரசியற்றிருத்தத்திற்கு மாறாக நின்று பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்கத் தக்க பிரதிநிதிகளையே இப்போது அனுப்புதல் வேண்டும்" என்று இந்த வகுப்புவாதிகள் விஷயந்தெரியாத பொது ஜனங்களுக்குக் கூறி ஏமாற்ற முயற்சி செய்கின்றனர்; சிங்களமக்கள் தாமே அதிகாரம் வகிப்பதற்கே அரசியற்றிருத்தம் வேண்டுமெனவாதாடுகின்றனர் என்றுவைத்துக் கொள்வோம்.

6000 மைல்களுக்கப்பால் இருந்து இங்கேவந்து, தம் கருமத்தில் மாத்திரம் கண்ணாயிருந்து, இந்நாட்டுச் செல்வத்தையெல்லாம் சுரண்டிக் கொண்டு போகும் அந்நியர் அதிகாரம் வகித்தல் நன்றா? ஓரேயன்னையாம் இலங்காதேவியின் மணிவயிற்றுதித்த நம்சகோதரர், பலவிஷயங்களில் எமமோடு அன்றுதொட்டின்றுவரை ஒற்றுமை பூண்டிருக்கும் நமது சகோதரரான சிங்களர் அதிகாரம் வகிப்பது நன்றா? அந்நியர் ஆட்சியிலும்பார்க்க நமது சகோதரர் ஆட்சி மேலானதன்றோ? ஆனால் நம் சகோதரரான சிங்களர் எம்மெல்லோரினதும் க்ஷேமத்தைக்கருதியே அதன் பொருட்டு வாதாடுகிறார்கள். ஆதலால், தமிழ்மக்களாகிய நாம் இந்த வகுப்புவாதிகளின் பசப்பு மொழிகளுக்கு செவிசாய்க்காது, இலங்கையின் முன்னேற்றத்திற்கான வழிகளைக் கையாளுவோமாக.

இங்ஙனம்
நன்மைவிரும்பி.

யாழ்ப்பாணம்
20 - 2 - 34

## பதார்த்தம்.

(ஸ்ரீ. த. பூலோகசுந்தரம் எல். ஐ. எம்.)

இவ் வுலகத்தின் கண் நாமநுபவித்துக் காணும் பொருள்களும் அநுமித்து நாமத்தோடு காணும் பொருட்களும் பதார்த்தங்களேயாம். அப்பதார்த்தங்களின் தோற்றக் கிரமம் யாதெனில், தேடிக் காணுதற் கரியதும்; ஓர் எல்லைக்குள் அடங்காததும அறிவுக்கு எட்டாத பூரண நிறைவாயும், தன் செய்கையுள் எல்லாவற்றையுந் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் வல்லதாயும், தனக்குமேல் ஒருபொருள் இல்லாததாயும், தானே யாவற்றுக்கு மேம்பட்டதாயும்; ஒப்பற்ற பொருளாயும் விளங்குகின்றது எதுவோ அதற்குள் மறைந்து நின்ற அறிவின் விளக்கத்தில் ஸாத்வீக, ராஜஸ, தாமஸ குணங்களாகிய முக்குணங்கள் தோன்றின.

முக்குணங்களின் ஒன்றோடொன்று பிணைந்திருக்கும் ஆயினும் எக்குணம் மேம்பட்டு நிற்குமோ அக்குணத்தின் பெயரால் அழைக்கப்படும், ஆகையால்இவற்றில்

தாமத குணத்தினின்றும்:—(1) தநு, (2) கரணம், (3) புவனம், (4) போகம் என்பன உண்டாயின.

இவற்றின் தோற்றத்திற்கு ஆதாரமாகிய பஞ்சதன் மாத்திரையினின்று பூதங்கள் உண்டாயின.

பஞ்சதன் மாத்திரைகள்—(1) சப்ததன் மாத்திரை, (2) ஸ்பரிசதன் மாத்திரை, (3) ரூபதன் மாத்திரை (4) ரசதன் மாத்திரை, (5) கந்ததன் மாத்திரை, என்பனவே.

ஸ்தூல பஞ்சபூத தோற்றம்:—தன்மாத்திரை பூதங்கள் பஞ்சீகரித்து அவைகளினின்று முறையே (1) ஆகாயம்—(விண்) (2) வாயு—(கால்) (3) தேயு—(அனல்) (4) அப்பு—(புனல்) (5) பிருதிவி—(மண்) என்னும் ஸ்தூல பஞ்சபூதங்கள் தோன்றின.

இவ்வைந்து ஸ்தூல பஞ்சபூதங்களில்:—1. ஆகாயம்—சப்தம்—(ஓசை) 2. வாயு—ஸ்பரிசம்—(ஊறு) 3 தேயு—ரூபம்—(ஒளி) 4 அப்பு—ரசம்—(சுவை) 5 பிருதிவி—கந்தம்—(நாற்றம்) இவையே இயற்கைக் குணங்களாய் அமைந்திருந்தும், இவ்வாறுகத் தோன்றிய பிருதிவி தோற்றுவிக்க உலகத்தில் உயிர்கள் நிலைபெறுவதற்கு முக்கிய ஆதாரமாகிய பதார்த்தங்கள் தோன்றும்.

### பதார்த்த தொகை:

அவ்வாறு தோன்றிய பதார்த்தங்கள் யாவும் முத்தொகையிலடங்கும் அவை—(1) தாதுப்பொருள் (2) தாவரப் பொருள் (3) சங்கமப்பொருள் என்பனவே.

சராசரப் பொருட்கள்—மேற் கூறியவற்றுள் தாது, தாவரப் பொருட்களை அசரப் பொருட்கள் (நிலையியற் பொருட்கள்) என்றும் சங்கமப் பொருட்களை சரப் பொருட்கள் இயங்கியற் பொருட்கள்) என்றும் கூறுவது வழக்கம் எனினும் மேற்கண்ட முத்தொகைப் பொருட்களும் சரப் பொருட்களேயாம்.

தாது தாவரப் பொருட்களை அசரப் பொருட்கள் என்றதன் காரணம்:—இவைகளின் இயக்கம் சாதாரண கண்களுக்குப் புலப்படாமல் இருப்பதால் சரப் பதார்த்தங்களினின்றும் வேறுபிரித்து உணர்த்துவதற்காக ஏற்பட்ட பரியாயப் பெயரேயாம்.

(தொடரும்.)


## அரசாங்க சபைத் தெரிவு!

விளம்பரங்கள் அழகாகவும்
துண்டுப் பத்திரங்கள் முதலியன துப்பரவாகவும்
சுவர் விளம்பரங்கள் பல வர்ண மைகளிலும்

சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சடித்துக் கொடுக்கப்படும்.

சிறந்த வேலை! உத்தரவாதம்!

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

# முற்பணமே கட்டவேண்டும்.

மானேஜர்.

## பெல்ஜிய அரசர் மரணம்

—(*)—

### மலைமே லேறுகையில் விபத்து.

### மண்டை உடைந்ததால் மரணம்.

பெல்ஜியம் தேச அரசரான அல்பேர்ட் என்பவர் சென்ற சனிக்கிழமை ஞெச்சர் டெஸ் டேபஸ் என்னும் மலைமேலேறுகையில் காலதவறி விழ்ந்து இறந்தார் என்று சென்ற செவ்வாய்க்கிழமை வந்த செய்தி ஒன்று கூறுகிறது. மன்னர் தனியேசென்றதால், அவரின் பிரேதம் அடுத்தகாலை மத்தியானமே ஓர்பள்ளத்தாக்கிற் காணப்பட்டது. அவருடைய மண்டையிற் பெருங் காயம் ஒன்று காணப்பட்டது அதன்பயனாகவே இறந்தாரென்று யூகிக்கப்படுகிறது.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி.

2117ம் இலக்கப் பொலிஸ் பஸ்சாரதிகளை வருத்துகிறுன் என்ற எதிரி உள்நாட்டு மந்திரிக்கோர் தந்தி அனுப்பினுர்?—ஆம்.

அனுமதியின்றிப் பஸ்சாரதிகள் விஷயத்தில் பிரவேசித்தமைக்காக 1136-ம் இலக்கப் பொலிஸ் தண்டிக்கப்பட்டான்?—ஆம்,

17-ம் திகதி நடந்த கூட்டத்தில் சில துண்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அவற்றில் எதிரி பயந்த காந்திக்குவாலை நீதிபதியின் உத்தரவுப்படி அகற்றினுர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தத் துண்டுப் பத்திரத்தை யார் எழுதியவர் என்பது உமக்குத் தெரியுமா?—தெரியாது.

அதை அச்சடிப்பதற்காகப் "பாதுகாவலன்" காரியாலயத்திற்கு நீர் அனுப்பினீரா?—இல்லை. வேண்டுமென்றே யாரோ உமக்கு அப்படிச் சொல்லியிருக்கிருர்கள்.

இதன்பின் ஆறுமுகம் கந்தசாமி என்னும் பஸ்சாரதி சாட்சியம் சொன்னுன். அவன் கூறியன வருமாறு:

"நான் பொலிசாருக்கு முறைப்பட்டேன். 998-ம் இலக்க பஸ்சாரதி தனது ரதத்தை மூன்று நாட்களுக்குச் செலுத்தும்படி என்னைக்கேட்டார். நானும் ஒப்புக்கொண்டு செலுத்தினேன். நான் சகலாத சகாயச் சங்கத்திற் சேரவில்லை. மேற்படி சங்கத்தில் உள்ள எந்தச் சாரதியும் என்னைப் பயமுறுத்தவில்லை; இன்றுகாலை எதிரியுடன் நான் மோட்டாரதத்திற் செல்லவில்லை."

டஸ்சாரதி சீனிஸ் அப்புகாமியின் சாட்சியம்.

"பிப்ரவரிமாதம் 5-ம் தேதி பஸ்ஸுடன் மத்தியானம 12½ மணியளவில் காலைக்கு வந்தேன். அப்போது சங்கத்துத் தலைவரான "காந்தி" அல்லது "பகவத்சிங்" எனப்படும் எதிரி ஓர் பொல்லுடன் வந்து, "இவனுர், சங்கத்து அங்கத்தவனுயிருக்கும், சந்தாப்பணம் கொடுக்காதவன; உனனுடைய பஸ் ரதத்தை எரித்துப் போடுவேன்; இதெல்லாம் பொலிசாராலும் சீனிவாசகத்தாலும் வந்தன. பஸ்ஸை நீ வெளியே கொண்டுபோனுல், உன்னையும் சீனிவாசகத்தையும் சுடடுக்கொலலுவேன்" என்ருர். நான பயந்து பொலிசருக்கு அறிவித்தேன். மிஸ்ரர் குணசேகர வந்ததும், ஓர் சிங்களச் சாரதி என்னை அவரிடம அழைத்துச் சென்ருர்.

"சென்ற மூன்றுமாதகாலமாக எனக்கு வேலையில்லை. பஸ் சாரதிவேலை தருப்படி சங்கத் தலைவரான எதிரிக்கு மறுச்செய்தேன். ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றேன என்று குற்றமசாட்டப்பட்டுச் சுப்பிறீமகோட்டில் விடுதலை செய்யப்பட்டேன. பஸ்காலையில் பணம் திருடினேன என்று என்மீது ஓர் வழக்கு இந்த நீதிஸ்தலத்தில் இருக்கிறது"

பொலிஸ் விசுவலிங்கத்தின் சாட்சியம்.

"சென்ற 5-ம்தேதிபஸ்காலைக்குச்சமீபமாகவுள்ள ஓர் கடையில் தேநீர் குடித்துக் கொண்டிருக்கையில் எதிரி 3, 4பேருடன் அங்கு வந்து ஏதோ ஆங்கிலத்தில் என்னைக் கேட்டார். எனக்கு அவர் கேட்டது விளங்கவில்லை. பின் அவர் என்னை நோக்கி, "பொலிஸ் காரராகிய நீங்கள் எல்லாரும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும; முதலாவது உங்கள் பொலிஸ் அதிகாரியின தலையை எடுத்துவிட்டுப்பொலிஸ் தானத்தையும எரிப்பித்து விடுவேன. கதர் அணிந் திருப்பதால் என்னை "காந்தி" என எண்ணவேண்டாம். சான பாரதநாட்டுப் பகவத்சிங்" நீ போய் உனது ஆட்களுக்கும அதிகாரிக்கும் எச்சரிக்கையா யிருக்கும்படி சொல் என்ருர்." நான் அவருக்குக் கோபம் வரத்தக்கதாகஒன்றுமசொல்லவும் இல்லை,செய்யவும் இல்லை. நான் இதன்பின் பொலிஸ் தானத்திற்குச் சென்று முறையிட்டேன்."

காலைக் குத்தகைக்காரர் ஸ்ரீ. R. M. வேலுப்பிள்ளை அவர்களின் சாட்சியத்திற்குப பின்னர் நீதிபதி எதிரியை நிரபராதியாகக்கண்டு விடுதலை செய்தார்.

## பின்னிற்க வேண்டாம்!

—*—

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப் படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனலயத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

சென்ற வெள்ளிக்கிழமை யன்று 300 ரூபாயும், முன்னர் 200 ரூபாயும், ஆக 500 ரூபா பீகார் பிரபல தேசியத் தலைவரான பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

மானேஜர்.

| | ரூ | ச |
|---|---|---|
| முன்னர் சேகரிக்கப்பட்டது. | 658 | 02 |

புங்குடுதீவு
ஸ்ரீ சுப்பிரமணியவித்தியாசாலையாற்
சேகரிக்கப்பட்டது.

திரு. மு. கந்தையா 50 சதம், புங்குடுதீவு மேற்கு மிஷன்பாடசாலை 3 00 திரு. A. நாகலிங்கம் 1 00 K. A. இளையதம்பி 1 00 P. சுவரிமுத்து 1 00 A. சரவணமுத்து 1 00 ஆ. கந்தசாமி 50 சதம். பொ. இரத்தினம் 50 சதம், க, யோவுப்பிள்ளை 1 00 கா. ஆறுமுகம் 50 சதம். V. K. ஆறுமுகம் 1 00 A. S. அகஸ்தின் 50 சதம், சி. அமிர்தவாசகம் 25 சதம், S. முருகேசம்பி 1 00 T. S. ஆறுமுகம் 50 சதம், V. பசுபதிப்பிள்ளை 1 00 P. S. கந்தையா 1 00 N. சேதுபதி 1 00 திரு R. தம்பு 1 00 க. பொன்னுத்துரை 50 சதம், பொ. தம்பிப்பிள்ளை 50 சதம், க. சின்னத்துரை 50 சதம், க. தம்பிராசா 50 சதம், மு. கதிரவேற்பிள்ளை 50 சதம், பிரமஸ்ரீ. சோ. பஞ்சாட்சரக்குருக்கள் 1 00 திரு. K. செல்லத்துரை 50 சதம், க. தம்பு 50 சதம், அ. செல்லத்தம்பி 1 00 ஸ்ரீமதி. வ. திருஞானம் 50 சதம், திரு. அ. ஆறுமுகம் 1 00 க. முத்தையா 50 சதம், S. அம்பலவாணர் 1 00 சி. கணபதிப்பிள்ளை 1 00 க. மு. சின்னத்துரை 1 00 சீ. ஆறுமுகம் 50 சதம், ஸ்ரீ சுப்பிரமணியவித்தியாசாலை, 3 25 சதம், பிரமஸ்ரீ வே. சிவஞானசர்மா 25 சதம், பொ. சின்னத்தம்பி ஐயர் 25 சதம், ஆக. 32 00

| | | |
|---|---|---|
| ஸ்ரீ S. P. முருகுப்பிள்ளை (அல்வாய் வடக்கு) | 2 | 00 |
| C. சின்னப்பு (சண்டிலிப்பாய் வடக்கு) | 2 | 00 |
| W. D. டைகல் | 2 | 00 |
| திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை மாணவர் | 8 | 42 |
| ஆக ரூ. | 704-44 | |

### ஸ்ரீமத். சுவாமி சிவானந்தா சமாதியானுர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தலைவரான ஸ்ரீமத். சுவாமி சிவானந்தா அவர்கள் மகாசமாதி யடைந்தார் என்று இன்று தந்திச்செய்தி கிடைத்திருக்கிறது.

### 14 லட்சம் ரூபா.

சென்ற திங்கட்கிழமை முடிய பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களின் பூகம்பச் சேதச்சகாய நிதிக்கு 1,405,710—ரூபா சேர்ந்திருக்கிறது.

### அரசாங்க சபைத் தெரிவு.

இன்னெரு அபேட்சகர்.

மிஸ்ரர்: எச். ஏ. பீ. சந்திரசேகரா கே. ஸீ அவர்கள், தாம் யாழ்ப்பாணப் பட்டினப்பகுதி அபேட்சகராக முன்வந்திருக்கிருர். எனவே, இப்பகுதிக்கு இற்றைவரை மூவர் வெளிவந்திருக்கின்றனர்.

### சங்கீத கதாப்பிரசங்கம்.

சென்ற ஆண்டு இங்குவந்து பல உயரிய கதாபிரசங்கங்கள் செய்துவந்த, வலங்கைமான சங்கீத வித்துவான் ஸ்ரீமான். கோ. இராமையா பாகவதர் அவர்கள மீண்டும யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர் என்றும், வருகிற சனிக்கிழமை (24-2-34) இரவு 8 மணி தொடக்கமாக சாவித்திரி சத்தியவான் சரித்திரத்தை வண்-வெங்கடேசப் பெருமான் சந்நிதானத்திலே நடத்துவார் என்றும் அறிகிருேம். இக்கதையைப் பாகவதர் அவர்கள கீர்த்தனத்துடன் செய்வார் என்றும் தெரிகிறது.

## சைவ பரிபாலன சபை.

### அதன் உற்பத்தியும் வளர்ச்சியும்.

(15—2—34-ன் தொடர்ச்சி.)

IV. "(1) இச்சைவபரிபாலனசபையின் மேல்விசாரணை இச்சபைக்கு வருஷமொன்றுக்கு மூன்று ரூபாவுக்குக் குறையாத தொகை கொடுக்கிறவர்கள் கூடிய மகாசபையாரால் நியோகிக்கப்படுகிற முப்பத்தாறு பேருக்கு அதிகப்படாத அங்கத்தவர்களையுடைய அதிகாரசபையின் பொறுப்பிலே இருத்தல் வேண்டும். (2) இச்சைவபரிபாலன சபையின் பொருட்டுச் சேர்க்கப்படுகிற பொருள்களைப் பாதுகாத்தல் செலவழித்தல் முதலிய எப்பொறுப்புகளும் குறித்த அதிகாரசபையாரின் பொறுப்பிலே இருத்தல் வேண்டும். (3) இவ்வதிகாரசபை இசசபையின் கருமங்களை ஆலோசித்துத் தீர்மானிக்கும் பொருட்டு வருடத்தில் இரண்டுமுறைக்குக் குறையாதபடி கூடுதல் வேண்டும். (4) அப்படிககூடும் கூட்டங்களின் வர்த்தமானங்களையும் வந்தவர்களுடைய பெயர்களையும் அதிகாரசபையின் இலேககர் ஒரு புத்தகத்தில் ஒழுங்காயெழுதிவைத்திருத்தல் வேண்டும். (5) இச்சைவபரிபாலன சபையின் நோக்கத்துக்கு அநுகூலமான கருமங்களை நடத்துதற்கு வேண்டிய விதானங்களையும் ஒழுங்குகளையும் உண்டுபடுத்தவும் அவைகளை நடைபெறச்செய்யவும் இவ்வதிகாரசபையாருக்கு அதிகாரமிருக்தல்வேண்டும். (6) இவ்வதிகாரசபையை நடத்துதற்கு இச்சபையாரில் பத்துப்பேருக்குக்குறையாத அங்கத்தவர்கள் கூடுதல் வேண்டும். (7) இவ்வதிகார சபையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொருமுறையேனும் வந்தாற்ருன் மூன்றுவருஷத்துக்கும் அவ்வுத்தியோகத்திலிருக்க உரிமையுடையவர்களா யிருக்கவேண்டும். (8) அப்படி வராதவர்கள் வராத வருஷமுடிவில் உத்தியோகத்தினின்றும் விலக, அவர்களுடைய இடத்துக்கு வேறுபேரை முறைமையான விளம்பரத்தால் கூட்டப்படும் மகாசபையார் தெரிவுசெய்தல் வேண்டும். (9) அஙஙனம் பதிவாக ஏற்படுத்தப்பட்ட அங்கத்தவர்கள் ஏனைய அங்கத்தவர்கள் விலகுங்காலத்திலே விலகல் வேண்டும் (10) இச்சைவபரிபாலனசபைக்கு வருஷமொன்றுக்கு ரூ ௱ ஏழரை உபகரிக்கிறவர்களேயன்றி ஏனையோர் இவ்வதிகார சபையில் அங்கமாயிருக்க உரிமையில்லாதவராயிருப்பார்கள்" என்று ஸ்ரீ அரு சபாபதிப்பிள்ளையால் பிரேரிக்கப்பட்டது. அது கொழும்புத்துறை ஸ்ரீ தி. குமாரசுவாமிச் செட்டியாரால் அநுவதிக்கப்பட்டுச் சர்வ சம்மதம்பெற்றது.

V "(1) அதிகாரசபையின் முதற் கூட்டத்தில் வரிக்கப்படும் பன்னிரண்டு பேரையுடைய நிருவாகசபை அதிகாரசபையின் விதிகளை நிறைவேற்றுதல் வேண்டும். (2) இந்த நிருவாகசபையை நடத்துதற்கு ஐந்துபேருக்குக் குறையாத தொகையினர் கூடுதல்வேண்டும். (3) இந்த நிருவாக சபையார் மூன்று வருடத்துக்கு அல்லது அதற்குமேலே அதிகாரசபையார் வேறு தெரிவுசெய்யும் வரையும் உத்தியோகத்தில் இருப்பார்கள. (4) நிருவாகசபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் வருஷமொன்றுக்கு இச்சபைக்கு ரூபா பதினெட்டுக் கொடுத்தல்வேண்டும." என்று ஸ்ரீ A. குமாரசூரிய முதலியார் பிரேரித்தனர். அது ஸ்ரீ சி. இராமப்பிள்ளை வைத்தியரால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயிற்று.

VI. "அதிகாரசபையானது 1. ம.ா. ா. ஸ்ரீ தா. செல்லப்பாபிள்ளை அவர்கள் B. A. B. L. (அக்கிராசனுதிபதியாகவும்) 2. அப்புக்காத்து ஸ்ரீ நாகலிங்கபிள்ளை (பிரதியக்கிராசனுதிபதியாகவும்) 3. சுப்பிறீம கோட் பிறக்கிருசி ஸ்ரீ காசிப்பிள்ளை (இலேககராகவும்) 4. ஸ்ரீ த. கைலாசபிள்ளை (உதவி இலேககராகவும்) 5. ஸ்ரீ சித மு. பசுபதிச்செட்டியார் (தனுதிகாரியாகவும்) 6. வலிகாமம் மேற்கு மணியகாரர் ஸ்ரீ இ. இரகுநாத முதலியார், 7. யாழ்ப்பாண மணியகாரர் ஸ்ரீ மு. தம்பாபிள்ளை முதலியார், 8. புத்தூர் ஸ்ரீ S. முத்துச்சுவாமி, 9. ஸ்ரீ ந. ச. பொன்னம்பலபிள்ளை, 10. ஸ்ரீ A. குமாரசூரிய முதலியார், 11. கொழும்புத்துறை ஸ்ரீ தி. குமாரசுவாமிச் செட்டியார், 12 வண் ஸ்ரீ கா. பொன்னம்பலபிள்ளை, 13. ஷெ ஸ்ரீ தா இராமலிங்கபிள்ளை, 14 ஸ்ரீ சி. இராமப்பிள்ளை வைத்தியர், 15. ஸ்ரீ வே முதலியார் முத்துவேலுப்பிள்ளை, 16. சிருப்பு O B C. ஸ்ரீ மு கணபதிப்பிள்ளை, 17. தாவடி ஸ்ரீ ச சண்முகபிள்ளை, 18. அப்புக்காத்து ஸ்ரீ கனகசபைப்பிள்ளை, 19. கொக்குவில் ஸ்ரீ அரு. சபாபதிப்பிள்ளை, 20. புலோலி ஸ்ரீ ம. சுப்பிரமணியபிள்ளை, 21. வண் ஸ்ரீ ஆ. சுப்பிரமணியபிள்ளை, 22. ஸ்ரீ வெ. மயில்வாகன வைத்தியர், 23. ஸ்ரீ ச சபாரத்தினபிள்ளை, 24. ஸ்ரீ ப. இலங்கநாயகமுதலியார், 25. நீர்வேலி ஸ்ரீ ச. பண்டிதர் சிவப்பிரகாசபிள்ளை, 26. வைத்தியர் ஸ்ரீ த. சிவப்பிரகாசபிள்ளை, 27. கோப்பாய் ஸ்ரீ அ. முதலியார் மயில்வாகனபிள்ளை, 28. சுழிபுரம் ஸ்ரீ சு. கனகரத்தின முதலியார், 29. வண் ஸ்ரீ கு. செல்வநாயகம்பிள்ளை, 30. ஷெ ஸ்ரீ இ. மயில்வாகனபிள்ளை, 31. ஷெ ஸ்ரீ சி. சின்னையாபிள்ளை, 32. தொல்புரம் ஸ்ரீ ஆ. கிருஷ்ணபிள்ளை, 33. வட்டுக்கோட்டை ஸ்ரீ மு. வைத்தியலிங்கபிள்ளை, 34. மணியகாரர் ஸ்ரீ சிவசிதம்பரமுதலியார், 35. ஷெ ஸ்ரீ கதிரித்தம்பி முதலியார், 36. ஷெ சரவணமுத்து முதலியார், என்னும் முப்பத்தாறுபேரையும் உடைத்தாக இப்போது வரிக்கப்படுதல் வேண்டும்." என்று ஸ்ரீ த. சிவப்பிரகாசபிள்ளை பிரேரித்தனர். அதனை ஸ்ரீ தா. இராமலிங்கபிள்ளை அநுவதித்தனர். அது சர்வசம்மதமாயிற்று.

VII. "இந்த அதிகாரசபையார் கூடி நிருவாகசபையை வரிக்குமளவும் ம. ா. ா. ஸ்ரீ தா. செல்லப்பாபிள்ளை அவர்கள் (அக்கிராசனுதிபதியாகவும்) ஸ்ரீ. சி. நாகலிங்கபிள்ளை (பிரதி அக்கிராசனுதிபதியாகவும்) ஸ்ரீ வி. காசிப்பிள்ளை (இலேககராகவும்) ஸ்ரீ த. கைலாசபிள்ளை (உதவி இலேககராகவும்) ஸ்ரீ சித. மு. பசுபதிச்செட்டியார் (தனுதிகாரியாகவும்) ஸ்ரீ இ. இரகுநாத முதலியார், ஸ்ரீ. அரு. சபாபதிப்பிள்ளை, ஸ்ரீ அ. மயில்வாகனபிள்ளை, ஸ்ரீ த. சிவப்பிரகாசபிள்ளை, ஸ்ரீ வே. முதலியார் முத்துவேற்பிள்ளை, ஸ்ரீ அ. கனகசபைப்பிள்ளை, ஸ்ரீ ச. சண்முகபிள்ளை, ஸ்ரீ சி. சின்னையாபிள்ளை என்னும் பன்னிருவரும் நிருவாகசபையாக வரிக்கப்படுதல் வேண்டும்" என்று ஸ்ரீ வே. முதலியார் முத்துவேற்பிள்ளை பிரேரித்தனர் அது ஸ்ரீ சு கனகரத்தின முதலியாரால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயிற்று."

இராமநாதரை இச்சபையார் தங்கள் இங்கிலிஸ் வித்தியாசாலையில் அழைத்து உபசரித்தார்கள். அதைப்பற்றி 1890ஆ புரட்டாதிமீ 24ல வெளியான இந்துசாதனத்திலிருப்பது இது:—"19ல வெள்ளிக்கிழமை யிரவு வண்ணுர் பண்ணையிலே "சைவபரிபாலன சபை"யாரால் ஸ்தாபிக்கப்பட்ட அங்கில வித்தியாசாலையை முன்னெக்காலத்தும் எவாறு மிங்கு அலங்கரித்திராத அவ்வளவு விநோதமாக அலங்கரித்து, இந்திர சிம்மாசனமோ என்று யாவருமதிசயிக்கத்தக்க ஓர் சிம்மாசனம் உண்டாக்கி, அவ்வித்தியாசாலையின் முகப்பிலோர் ரதவடிவமான உன்னத பந்தரிட்டு, பலவித வர்ண தீபங்களேற்றிச் சோதிமயமாய் விளங்க அமைத்த அப்பந்தருக்கு ஸ்ரீ அப்புக்காத்து நாகலிங்கபிள்ளை முதலிய பல பிரபுக்கள் சேர்ந்து கௌரவ இராமநாதர் கிருகஞ்சென்று, நானுவித வாத்திய கோஷங்களோடும், வைத்தியர் ஸ்ரீ கனகசபைப்பிள்ளையாலும் வே. முதலியார் முத்துவேற்பிள்ளையாலும் செய்விக்கப்பட்ட பலவித விநோதமான பாணவேடிக்கைகளோடும் அவரை அழைத்து வந்து சிமாசனத்திருத்தியபின், தேவார பாராயணத் தொடக்கத்தோடு இங்கிலிசிலும் தமிழிலும் வந்தனுபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. வித்துவான்களால் இயற்றப்பட்ட அதிக்கீர்த்தனங்கள் பாடப்பட்டன. சில சிறுவர்கள் அங்கில திராவிட சம்ஸ்கிருத சங்கீதம் பாடி, சில முகவியமான விஷயங்களை அங்கிலபாஷையிற் சம்பாஷித்தார்கள." (தொடரும்)

இ ஹ ம்! இ ஹ ம்!!

## மகாராஜ தத்துவ சாலாமிஸ்ரி லேகியம்.

ஒரே வேளையில் ஆண்சிங்க பாவீர்கள்.

தங்கம் வெள்ளி முத்து பவளம் அயம் காந்தம் அம்பர் கஸ்தூரி சாலாமிஸ்ரியும் இன்னும் அநேக மூலிகையும் சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப்பெற்றது.

இதன் முக்கிய குணம்:—

காங்கை இசிப்புவலி கைகால் அசதி சூடு முதலிய மற்ற ரோகங்களனைத்தையும் சங்காரஞ் செய்யக்கூடியது இப்பூவுலகில் இந்த லேகியமொன்றே. முழுவிபரக்கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்; அவர் அவர் வியாதிக்குத் தக்கபடி ஒரு மண்டலம் அரை மண்டலம் சாப்பிடவேண்டும்.

1 மண்டலம் சாப்பிடின் ரூ. 10 0 0. ½ மண்டலம் ரூ. 5 0 0. ¼ மண்டலம் ரூ. 2 12 0

ஹக்கீம் V. A. றஜாக் கம்பெனி,
பறங்கிப் பேட்டை, (S. I.).


(Y. 147. 20-11-33to19-11-34.)

வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலை! குறைந்தவிலை!

## பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் இன்று தொடக்கம் (19-2-34) ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.
19-2-34.

Phone No. 93.

(Y. 3. 26-4-34).

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பெனி.

மிலிற்றறி, கவர்ன்மெண்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமெடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே செல்லையாபிள்ளை.-316-ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்றாய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

(Y. 2. 31-3-34.)

## பிரப்பங்குளம் மரக்காலை.

எங்கள் மரக் காலையில் பனைமரம், சலாகைகள், பாலை, வேம்பு, பலா, முதிரை, மா, சமண்டலை, சப்புமரம், வேண்டிய பிரமாணமுள்ள திராந்திகள், பலகைகள், சட்டங்கள், வாங்கு மேசை அலுமாரிகள், விறகு என்னுமிவைகள், வைக்கோல் நெல் இன்னும் வேண்டிய பொருள்களும் எந்த நேரமும் கொடுக்கப்படும்.

ஒருமுறை எங்கள் சாலையை வந்துபாருங்கள்

மு தம்பியையா,
பிரப்பங்குளம்ரோட்டு
வண்-மேற்கு, யாழ்ப்பாணம்.

(Y. 37. 9-8-3-34.) (வி)

## புறுடென்ஷல் வீமாக் கொம்பெனி.

1932-ம் வருஷ ஆதாய நன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடிந்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 28/வீதம்

1932-ம் ஆண்டிலேயே முடிந்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 23/= வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ 20 வீதம்,

அசைவற்ற காத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்து வைத்திருப்பதினாலேயே மேற்கூறிய பெரும் நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீமாத் திருவதானால்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி. தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

350,00,00,000 ரூபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது.

நமது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப்போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. கிமிஷனொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுள்ளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. இரத்தினசபாபதி,
Asst. Inspector,
Manipay.

க. சொர்ணலிங்கம்,
வடஇலங்கை மேற்பார்வைக் காறன்,
மானிப்பாய்

Delmege Forsyth & Co. Ltd. Agents.
The Prudential Assurance Co. Ltd. Colombo

(Y. 180 1-1-34 to 31-12-34) வி.

இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்

## 100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.
தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை.
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின் முதன்மையானதும்
சிறந்ததுமான திவ்விய ஔடதம்.
மிருகக்கொழுப்பு கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

Y 18. 11-2-33—10-2-34-)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Thursday 22, February 1934.